Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 30 சுபகிருது வருடம், ஆடி மாதம் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (02.08.2022) ஹிஜ்ரி - 1444, முஹர்ரம் - 03 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## மீண்டும் பரவும் ஒமிக்ரோன் பிறழ்வு

கொரோனா தொற்று வேகமாக பரவி வருவதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தொற்று வேகமாக பரவுவதால் 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் நான்காவது கொரோனா தடுப்பூசியினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ஜீ.விஜேசூரிய வலியுறுத்தியுள்ளார்.

ஒமிக்ரோன் பிறழ்வு மீண்டும் நாட்டில் பரவி வருவதாக விசேட...

02 பக்கம்




## எரிவாயு விலை குறைக்கப்படும்

### லிட்ரோ நிறுவனத் தலைவர் உறுதி

எரிவாயுவின் விலையை குறைக்க தீர்மானித்துள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர்...

02 பக்கம்



நல்லூர் கந்தசுவாமி கோவில் கொடியேற்ற நிகழ்வுக்கு கொடிச்சீலை கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றது. (படம் - யாழ். செய்தியாளர் )

# கோட்டா நாடு திரும்ப இது பொருத்தமான நேரமல்ல!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைக்கு திரும்புவதற்கு இது சரியான நேரமல்ல என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்தை நிர்வகிப்பதற்காக அவரை வெளியேற்ற அணிதிரண்ட பல்லாயிரக்கணக்கான எதிர்ப்பாளர்கள் மத்தியில் அரசியல் பதற்றத்தை இது தூண்டக்கூடும் என்றும் அவர் கூறினார். த வோல் ஸ்ட்ரீட் ஜேர்னலுக்கு நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது,

நிர்வாக கையளிப்பு பிரச்சினைகள் மற்றும் பிற அரசாங்க அலுவல்களை கையாள்வதற்காக கோட்டாபய ராஜபக்ஷவுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறேன். ஆனால், விரைவில் இலங்கைக்கு திரும்ப திட்டமிட்டுள்ளதாக ராஜபக்ஷ என்னிடம் கூறவில்லை.

அவர் திரும்பி...

02 பக்கம்

# சீனக்கப்பலை அனுமதிப்பதா?

## அமைச்சரவையில் நேற்று தீவிர ஆராய்வு

## இன்று கட்சித்தலைவர்களுடன் பேசத் தீர்மானம்

(நமது அரசியல் நிருபர்)

சீனாவின் இராணுவக்கப்பலை இலங்கைக்குள் அனுமதிப்பது தொடர்பில் இந்தியா கடும் அதிருப்தி வெளியிட்டிருக்கும் நிலையில், இந்த விவகாரம் நேற்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் கூடிய அமைச்சரவையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

சீனாவின் இராணுவக்கப்பலை இலங்கைக்குள் அனுமதித்தால் இப்போதைய நிலைமையில் தேவையற்ற இராஜதந்திர நெருக்கடிகளை இலங்கை சந்திக்கவேண்டிவருமென அமைச்சர்கள் பலர் அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஏற்கனவே...

02 பக்கம்

# 22ஆவது திருத்தத்திற்கு கெபினெட் அனுமதி

(யோ.தர்மராஜ்)

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, 'தமிழன்' செய்திகளிடம் நேற்றிரவு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவையிலேயே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட திருத்தம் செய்த 22ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

இதனைத் தொடர்ந்து 22ஆவது அரசியலமைப்பு திருத்தம் வர்த்தமானியில் அறிவிக்கப்படுவதோடு, யாரேனும் நீதிமன்றத்திற்குச் செல்வதாயின் அதற்கும் ஒரு வார கால அவகாசம் இருக்கின்றது. பின்னர், இது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும். அதன்படி, 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள புதிய கூட்டத்தொடரின் இரண்டாவது அமர்வில் சமர்ப்பிக்கப்படலாம் என்றார்.

# டெங்கு காய்ச்சலின் பிறழ்வு அடையாளம்

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

டெங்கு காய்ச்சலின் புதிய பிறழ்வு அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

காய்ச்சல் ஏற்படின் உடனடியாக வைத்தியரை நாடுமாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ஜீ.விஜேசூரிய வலியுறுத்தினார்.

இதனால், டெங்கு நுளம்புகள் பரவாத வகையில் சுற்றுச்சூழலை பாதுகாப்பாக வைத்திருக்குமாறும் விசேட வைத்திய நிபுணர் மக்களை கேட்டுக்கொண்டார்.

அத்துடன், பிள்ளைகளுக்கு டெங்கு காய்ச்சலுக்கான அறிகுறிகள் காணப்பட்டால் அல்லது காய்ச்சல் ஏற்படுமாயின் உடனடியாக வைத்தியரை நாடுமாறும் அவர் குறிப்பிட்டார்.

இந்நாட்களில் வயதானவர்கள் மற்றும் சிறுவர்களுக்கு ஒரு வகையான...

02 பக்கம்

# பொதுஜன பெரமுனவினர் மஹிந்தவின் தலைமைத்துவத்தை ஏற்கின்றனர்

## சதிகாரர்கள் வெளியேற்றப்படுவர் என்கிறார் சாகர எம்.பி.

(யோ.தர்மராஜ்)

மஹிந்த ராஜபக்ஷவே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவராவார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு அச்சம் கொண்டவர்களே, கட்சிப் பதவிகளில் மாற்றங்கள் ஏற்படவேண்டும் என நினைக்கின்றனர். ஆனால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள், மஹிந்த ராஜபக்ஷவின்...

02 பக்கம்

# தோல்வியடைந்த நாடாக இலங்கையைக் காட்ட முயற்சி!

## சர்வதேச சூழ்ச்சியென சாகர குற்றச்சாட்டு

(யோ.தர்மராஜ்)

இலங்கையை தோல்வியடைந்த நாடாக (பெயில் ஸ்டேட்) மாற்றுவதற்கு பாரிய சூழ்ச்சி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நாட்டை பிளவுபடுத்த கடுமையாக செயற்பட்ட குழுக்கள், இதற்காக தற்போது பணத்தை வழங்குவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

அத்தோடு, நாட்டு பணத்தை யாரும் கொள்ளையடிக்கவில்லை என்பதை மக்கள்...

02 பக்கம்



ஹட்டன் நகரில் வீதி ஓடைகள், கான்கள் புனரமைக்கப்படாத காரணத்தினால் மழைக்காலங்களில் மக்கள் பெரிதும் சிரமப்படுவதாக எமது வாசகர் சதாசிவம் நித்தியானந்தராஜா தகவல் தெரிவித்திருந்தார்.

நேற்று மாணவி ஒருவர் மழைநீரைத் தாண்டிப் பாய முற்படும் காட்சியே இது. மாணவர்கள் இவ்வாறு சிரமப்படவுள்ள அதேசமயம் இவை திடீர் விபத்துகளுக்கு வழிவகுக்கும் என்றும் நகரவாசிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?



# சீரற்ற காலநிலையால் 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை!

02 பக்கம்



## உஷ்

புதிய அமைச்சரவை வரும் 8ஆம் திகதி நியமிக்கப்படவுள்ளதாக தகவல்.

அமைச்சரவையில் பல புதிய முகங்களை அறிமுகப் படுத்தவுள்ளாராம் ரணில்.

நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கும் அமைச்சுப்பதவிகளை வழங்க ஆலோசிக்கப்படுகிறதாம்.

இதேவேளை பதவியிலிருந்து...

02 பக்கம்

# மஹிந்த, பெசிலின் பயணத்தடை நீடிப்பு

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் பெசில் ராஜபக்ஷ உள்ளிட்ட பலருக்கு விதிக்கப்பட்ட சர்வதேச பயணத்தடையை ஓகஸ்ட் 4ஆம் திகதிவரை நீடிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழு, இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர்...

02 பக்கம்

# டலஸ் தலைமையில் புதிய கூட்டணி

## பேச்சுகள் மும்முரம்

(யோ.தர்மராஜ்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்துசென்று, சுயாதீனமாகவுள்ள குழுக்கள் மற்றும் ஏனைய சில குழுக்களை இணைத்து புதிய அரசியல் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகளை மும்முரமாக முன்னெடுத்து வருவதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவித்தன.

இக்கூட்டணிக்கு முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவை தலைவராக நியமிப்பதற்கான பேச்சுவார்த்தைகளும்...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

ஒருபக்கம் பாதுகாப்பை பலப்படுத்திவிட்டதா சொல்லுற ரணில் ஐயா மறுபக்கம் கோட்டா நாட்டுக்கு வரக்கூடிய நிலைமை இல்லையெண்டும் சொல்லுறார்.. ஒரே குழப்பமாக் கிடக்குது..



# இலங்கை – இந்தியாவுக்கிடையிலான நட்புறவில் விரிசலை ஏற்படுத்தும் வெளிச்சக்திகளை அரசு அனுமதிக்கக்கூடாது

## நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் கோரிக்கை

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் காணப்படும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நட்புறவில் விரிசலை ஏற்படுத்த முயற்சிக்கும் வெளிசக்திகளுக்கு இலங்கை அரசாங்கம் ஒருபோதும் அனுமதி அளிக்கக்கூடாது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் வலியுறுத்தியுள்ளார்.

அவர் நேற்று ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தியாவுடனான நட்புறவு இலங்கைக்கு எந்தளவு முக்கியம் என்பது அண்மைய நெருக்கடி காலங்களில் இந்தியா இலங்கைக்கு புரிந்துவரும் மனிதாபிமான உதவிகள் மூலம்



வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சீன நாட்டினுடைய உளவுக் கப்பல் ஒன்று இலங்கை நோக்கி வருகை தருவதாக வெளியான செய்தியையடுத்து, இலங்கை மற்றும் இந்திய நாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்படுவது போலான செய்திகள் பரவி வருகின்றன. இது மிகவும் ஆபத்தான ஒன்றாகும்.

சீனாவின் அதிநவீன உளவுக் கப்பல் மூலம் இந்தியா உளவு பார்க்கப்படுவதாக சர்ச்சைக்குரிய தகவல்கள் வெளியாகியிருப்பதாலும் தமிழகத்தில் இந்த விடயம் பூதாகரமாக மாறியுள்ளதாலும் இலங்கை இது விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

இந்தியா, சீனா போன்ற உலக நாடுகளுடன் இலங்கை நட்புறவை பேணவேண்டிய அதே சமயத்தில் பிறிதொரு நாட்டை உளவு பார்க்கவும் அல்லது பிறிதொரு நாட்டின் மீதான தங்களது பகையை தீர்த்துக்கொள்ளவும் இலங்கையை மத்திய தளமாக பயன்படுத்தும் முயற்சிக்கு ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

எனவே, இது விடயத்தில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தி இந்தியாவுடனான உறவில் விரிசல் ஏற்படாதவாறு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# தன்னைத்தானே துப்பாக்கிச் சூடு நடத்திக்கொண்ட பொலிஸ் அதிகாரி

அம்பாறை தலைமையக பொலிஸ் நிலையத்தின் உப பொலிஸ் பரிசோதகரொருவர், அவரின் கடமைக்காக வழங்கப்பட்டிருந்த துப்பாக்கியினூடாக தன்னைத்தானே தலைப் பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்திக்கொண்டுள்ளார்.

அம்பாறை பொலிஸ் நிலைய உப பொலிஸாரின் வீட்டுத்தொகுதியின் முன்னால் நேற்று (01) காலை 10.50 மணியளவில் இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்திக்கொண்டுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்திக்கொண்ட நபர் படுகாயங்களுக்குள்ளான நிலையில், அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும், இதன் காரணமாக தலைப்பகுதி படுகாயங்களுக்குள்ளாகியுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.



இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை கிழக்கு பகுதிக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ராஜித்த ஸ்ரீ தமிந்தவின் ஆலோசனைக்கமைய அம்பாறை பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# டீசல் விலை குறைப்பு

விலை சூத்திரத்துக்கு அமைய நேற்று நள்ளிரவு முதல் ஒட்டோ டீசலின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அதன்படி, டீசல் ஒரு லீற்றரின் புதிய விலை 430 ரூபாவாகும்.

இதேவேளை, வேறெந்த எரிபொருளின் விலைகளிலும் எவ்வித மாற்றமும் இல்லையென பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

## உஷ்...

தற்காலிகமாக விலகிய நிமல் சிறிபால டி சில்வா மீண்டும் அமைச்சுப் பொறுப்பை இன்று ஏற்பாரென அறியக்கிடைத்துள்ளது.

அவருக்கெதிரான ஊழல் சம்பந்தமான விசாரணை ஆணைக்குழு அவரை நிரபராதியாக்கியதால் இன்று அவர் பதவியேற்பாரென அறியமுடிகின்றது.

## சீனக் கப்பலை...

இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளுக்கு இந்தியா செய்த உதவிகளை இங்கு சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர்கள், இந்த விடயத்தை சமரச அடிப்படையில் தீர்த்துக்கொள்ளவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளனர்.

எவ்வாறாயினும், இந்தியா இலங்கைக்கு வழங்கிவந்த கடனுதவிகளை நிறுத்திவிட்டதாக ஜனாதிபதி ரணில் அமைச்சரவையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பிரச்சினை மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதற்கப்பால், இந்தியா, சீனா ஆகிய இரண்டு நாடுகளும் இலங்கைக்கு தேவை என்ற விடயம் அமைச்சரவையில் பலராலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இந்த விடயத்தை ஆளுங்கட்சியிலுள்ள கட்சித்தலைவர்களுடன் பேசி கலந்துரையாடி இணக்கப்பாடொன்றுக்கு வருவதென அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று நடைபெறலாமென மூத்த அமைச்சர் ஒருவர் நேற்றிரவு 'தமிழன்' செய்திகளிடம் தெரிவித்தார்.

## டலஸ் தலைமையில்...

முன்னெடுக்கப்படுவதாக அறிய முடிந்தது.

நாடாளுமன்றத்திலுள்ள பிரதான ஆளுந்தரப்பான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்த பிரதான உறுப்பினர்கள் அங்கிருந்து வெளியேறி சுயாதீனமாக செயற்படுகின்றனர். இந்த நிலையில், கடந்த ஜனாதிபதி தெரிவின்போது, முன்னாள் அமைச்சர் டலஸ் அலகப்பெரும தனித்து போட்டியிட்டதால் கட்சிக்குள் கடும் அதிருப்திகள் ஏற்பட்டன.

இந்த நிலையில், அவருடன் தற்போது 11 உறுப்பினர்களுக்கு மேலாக இணைந்துள்ளதால், ஏற்கனவே, சுயாதீனமாகவுள்ள விமல் வீரவங்ச உள்ளிட்ட 11 கட்சிகள், சுதந்திரக் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு புதிய அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக இடம்பெறுகின்றன.

இக்கூட்டணிக்கு டலஸ் அலகப்பெருமவை தலைவராக நியமிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டாலும், ஏனைய கட்சிகளின் இணக்கப்பாடுகளுக்காக தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக அறிய முடிந்தது.

## எரிவாயு விலை...

முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில், உலக சந்தையில் எரிவாயு விலைக்கேற்ப ஓகஸ்ட் 05ஆம் திகதி முதல் எரிவாயு விலையை குறைக்க தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிதி அமைச்சு மற்றும் ஜனாதிபதி காரியாலயம் ஊடாக எரிவாயு விலை நிர்ணயம் தொடர்பில் விலை சூத்திரம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதற்கிணங்க, 05ஆம் திகதி எரிபொருள் விலை குறைப்பு கட்டாயம் சாத்தியப்படும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக அதிகரிக்கப்பட்ட 50 ரூபாவை விட அதிகமான ஒரு தொகை விலை குறைப்பு செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## டெங்கு காய்ச்சலின்...

வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாகவும் தொண்டைவலி, காய்ச்சல், இருமல், சளி போன்றவை புதிய வைரஸ் நோய்க்கான அறிகுறிகள் எனவும் அவர் கூறினார்.

வைரஸ் தொற்று குணமடைந்த பின்னரும் சிலருக்கு இருமல் நீடிக்குமாயின் மருத்துவ சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## மஹிந்த, பெசிலின்...

பெசில் ராஜபக்ஷ, இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால், டபிள்யூ.டி.லக்ஷ்மன் மற்றும் திறைசேரியின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல ஆகியோருக்கு சர்வதேச பயணத்தடை விதிக்குமாறு கோரி ஏற்கனவே மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கோட்டா நாடு...

வருவதற்கான நேரம் இது என்று நான் நம்பவில்லை.

அவர் விரைவில் திரும்பி வருவதற்கான எந்த அறிகுறியும் இல்லை.

நாடு அதன் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை அனுபவித்துள்ளது. அரசியல் ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதானது, சமீபத்திய கொந்தளிப்பின் காரணமாக ஸ்தம்பிதமடைந்த சர்வதேச நாணய நிதியத்தின் பிணை எடுப்புக்கான பேச்சுவார்த்தைகளை இறுதி செய்ய அனுமதிக்கும்.

நாங்கள் ஏற்கனவே அடிமட்டத்தை அடைந்துவிட்டோம் என்று நான் நினைக்கிறேன். நான் சுரங்கப்பாதையின் முடிவில் ஒளியைக் காண்கிறேன். நாம் எவ்வளவு விரைவாக அதை அடைய முடியும் என்பதே பிரச்சினை.

பணவீக்கம், எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயுவுக்காக நீண்ட வரிசையில் நிற்கும் பெரும்பாலான இலங்கையர்கள், அவர்களின் பொருளாதார நிலைமைகள் குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுவதைக் காண பல மாதங்கள் ஆகும்.

"நாங்கள் மோசமான நிலையில் இருக்கிறோம். ஸ்திரமற்ற அரசியல் நிலைமை இல்லாவிட்டால், இந்த மாதம் நாங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றிருப்போம்" என்றார்.

## மீண்டும் பரவும்...

வைத்திய நிபுணர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் மக்கள் ஒன்றுகூடும் இடங்களிலும் பொதுப்போக்குவரத்து சேவைகளை பயன்படுத்தும்போதும் முகக்கவசத்தை அணியுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன், தற்போது நாடளாவிய ரீதியில் நான்காவது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெறுவதால், இதுவரை தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் தடுப்பூசியை பெற்றுக்கொள்வது சிறந்தது என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில நாட்களாக, கொரோனா தொற்றாளர்கள் மரணிக்கும் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன், நேற்றும் 05 கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ஜீ.விஜேசூரிய மேலும் கூறியுள்ளார்.

## சீரற்ற காலநிலையால்...

*(யோ.தர்மராஜ்)*

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் நாட்டின் பல பகுதிகள் நேற்று (01) நீரில் மூழ்கியதுடன், 07 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, காலி, ஹம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நேற்று காலை முதல் நிலவிய சீரற்ற காலநிலையால் காலி, ஹம்பாந்தோட்டை, நுவரெலியா, இரத்தினபுரி, கண்டி உள்ளிட்ட மாவட்டங்களின் பிரதான நகரங்கள் நீரில் மூழ்கியதுடன் மக்களின் அன்றாட செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டிருந்தன.

மலையக பகுதியிலுள்ள நுவரெலியா - ஹட்டன் வீதியில் மண்சரிவு ஏற்பட்டு போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டிருந்தன. சில பகுதிகளில் கடும் இடியுடன் கூடிய மழையினால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, வீதிகள் எங்கும் வெள்ளநீர் ஓடியதால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக பாதிக்கப்பட்டிருந்தது. ஹட்டன் – கொழும்பு மற்றும் ஹட்டன் – நுவரெலியா, ஹட்டன்-பொகவந்தலாவை உள்ளிட்ட பல வீதிகளில் மண்திட்டுகள் சரிந்து வீழ்ந்துள்ளதில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், கொழும்பு – பதுளை புகையிர பாதையில் ஏற்பட்ட மண்சரிவுகளினால் கொழும்பு – பதுளை புகையிரத போக்குவரத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அதிக மழை வீழ்ச்சி காரணமாக காசல்ரீ, மவுசாக்கலை, கெனியோன், விமலசுரேந்திர, லக்ஸபான, நவலக்ஸபான, மேல் கொத்மலை உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்ந்தமையினால், மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான் கதவுகள் மாலை திறக்கப்பட்டுள்ளன. நேற்று காலை ஒரு வான்கதவு திறக்கப்பட்ட நிலையில் நீர்மட்டம் அதிகரித்ததால் மாலை மேலும் இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்டன. இதனால் சென்கிளயர் நீர்வீழ்ச்சியின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளன. அத்துடன், மேல் கொத்மலை அணைக்கட்டுக்கு கீழ் ஆற்றுப்பகுதியை பயன்படுத்துபவர்கள் விழிப்புடன் இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் பெய்து வரும் மழை காரணமாக காலி, ஹம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நேற்று (01) காலை 11 மணி முதல் இன்று (02) முற்பகல் 11 மணி வரை அமுலுக்கு வரும் வகையில் குறித்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதனால் மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் வாழும் மக்கள் நிலவும் காலநிலையை கருத்திற்கொண்டு அவதானமாக இருக்குமாறு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நில்வலா ஆற்றின் தாழ்வான பகுதிகளில் கணிசமான அளவு வெள்ளம் ஏற்படக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, அடுத்த 24 மணித்தியாலங்களில், பஸ்கொட, கொட்டபொல, அக்குரஸ்ஸ, அத்துரலிய, மாலிம்பட, திஹகொட, மாத்தறை, கம்புருபிட்டிய, முலட்டியன மற்றும் தெவிநுவர ஆகிய பிரதேச மக்களுக்கும் இதே எச்சரிக்கையை நீர்ப்பாசனத் திணைக்களம் விடுத்துள்ளது.

மேலும், தென்மேற்குப் பருவப்பெயர்ச்சி தீவிரமடைந்துள்ள நிலையில், நேற்று (01) முதல் அடுத்த சில நாட்களில் மேற்கு மற்றும் தெற்கு கடற்பரப்புகளிலும் தீவின் தென்மேற்குப் பகுதியிலும் மழை மற்றும் காற்றின் நிலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, வடக்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கு மேல் பலத்த மழை பெய்யவும் வாய்ப்புள்ளது.

ஊவா மாகாணம் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய மலைப்பகுதிகளின் மேற்கு சரிவுகளிலும், மேற்கு மற்றும் தென் மாகாணங்களிலும் காற்றின் வேகம் 50 கி.மீ. வரை அதிகரிக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழையுடன் கூடிய தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை குறைத்துக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மக்களை கோரியுள்ளது.

நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் நில்வல மற்றும் களு கங்கையை அண்டிய பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

களுகங்கைப் பகுதிகளில் கணிசமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதால், இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மடுல்ல, நிவித்திகல, இரத்தினபுரி, குருவிட்ட, அயகம, அலபத ஆகிய பிரிவுகளிலும் மாத்தறை மாவட்டத்தின் பஸ்கொட, கொட்டபொல, பிடபத்தர ஆகிய பிரிவுகளிலும் மற்றும் அக்குரஸ்ஸ, மாலிம்பட, மாத்தறை, கம்புருப்பிட்டிய, முலட்டியன மற்றும் தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் அடுத்த 24 மணித்தியாலங்களில் கணிசமான வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

## தோல்வியடைந்த நாடாக...

புரிந்துகொள்ள வேண்டும். நாட்டிலுள்ள பணத்தையும் அந்நிய செலாவணி இருப்பையும் யாராலும் கொள்ளையடிக்கவும் முடியாது.

எனவே, போலிப் பிரசாரம் முன்னெடுத்து, நாட்டை தோல்வியடைந்த நாடாக மாற்றி தங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யக் கொள்ள எடுக்கும் முயற்சிகளையும் புரிந்துகொண்டு செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (01) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் பாரிய சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக, கொவிட் தொற்றுக்கு பின்னரான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் 2022 மார்ச் மாதத்தில் எரிபொருள் பெற்றுக்கொள்வதில் நெருக்கடிகள் ஏற்படும். எனவே, சர்வதேச நாடுகளுக்குச் சென்று கடனுக்கு எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளுமாறு அப்போதைய நிதி அமைச்சர், வலுசக்தி அமைச்சருக்கு ஆலோசனை வழங்கினார்.

பின்னர், சர்வதேச நாட்டுக்குச் சென்று வந்த வலுசக்தி அமைச்சர், வருடத்துக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளதாக மக்களுக்கு அறிவித்தார். எனினும், அவ்வாறான ஒரு விடயம் இடம்பெற்றிருக்கவில்லை. அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு இவ்வாறு பல சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

தொடர்ந்தும் கடன்பெற்று, நாட்டை கட்டியெழுப்ப முடியாது. சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டும் என பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது என்பது, நாட்டை மீட்டெடுக்க முடியும் என்று கூற முடியாது. முறையான பொருளாதாரத் திட்டங்கள் மற்றும் மக்களால் சுயாதீனமாக எழுந்து நிற்கக் கூடிய, பொருளாதாரத் திட்டங்கள் ஊடாகவே நாட்டை கட்டியெழுப்ப முடியும்.

இந்த நிலைமைகளுக்கு மத்தியில், இலங்கையை தோல்வி கண்ட நாடாக (பெயில் ஸ்டேட்டட்) மாற்றுவதற்கு பாரிய சூழ்ச்சி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நாட்டை பிளவுபடுத்த பாடுபட்ட குழுக்கள், இதற்காக தற்போது பணங்களை வழங்கிவருகின்றன. யுத்தத்தால் அடையமுடியாத இலக்கை, வேறு வழியில் அடைய முடியும் என அந்த குழுக்கள் நினைப்பதாலேயே இவ்வாறான விடயங்களை முன்னெடுக்கின்றன. எனவே, உங்கள் உரிமைகளுக்காக வீதியில் இறங்கி போராடுங்கள், ஆனால் உரிமைக்காக போராடும்போது உங்களுடன் இருப்பவர்கள் யாரென்பதையும் அவர்களுக்கு பின்னாலுள்ள இயக்கம் என்ன என்பதையும் தெளிவாக அடையாளம் கண்டு கொள்ள விழிப்பாகவே இருக்குமாறு நாட்டு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். இல்லையேல், நாட்டை முன்னோக்கிக் கொண்டுச் செல்ல முடியுமா என்பது பாரிய சந்தேகம்.

இதேவேளை, நேற்று (நேற்றுமுன்தினம் 31) கிடைத்த தகவலொன்றால் நான் அச்சம் அடைந்தேன். கனடாவில் உள்ள நபரொருவரே எனக்கு இந்த தகவலை வழங்கினார். அவர் அவருடைய சமூக வலைத்தளங்களில், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக பதிவொன்றை பதிவிட்ட கையோடு, சர்வதேச அமைப்பொன்று அவரை தொடர்பு கொண்டுள்ளது. இந்த பிரசாரத்தை தொடர்ந்து முன்னெடுக்குமாறும், அதற்கான நிதி உதவிகளை வழங்க தயார் எனக் கூறப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நபரின் பிள்ளையின் வீட்டுக்கு முன்னால் ஏதேனும் ஒரு திட்டமிட்ட செயலை முன்னெடுக்குமாறும் அதற்கு தேவையான பணத்தை வழங்குவதாகவும் கூறியுள்ளனர்.

இப்படியான பல சூழ்ச்சிகளுக்கு மத்தியிலேயே அரசை முன்னெடுக்கின்றோம். நாட்டு பணத்தை யாரும் கொள்ளையடிக்கவில்லை என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாட்டிலுள்ள பணத்தையும் அந்நிய செலாவணி இருப்பை யாராலும் கொள்ளையடிக்கவும் முடியாது. எனவே, போலிப் பிரசாரம் முன்னெடுத்து, நாட்டை தோல்வியடைந்த நாடாக மாற்றி தங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள முயற்சிக்கின்றனர் - என்றார்.

## பொதுஜன பெரமுனவினர்...

தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்கின்றனர் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார். அத்தோடு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள சூழ்ச்சிக்காரர்கள் வெளியேற்றப்பட்டு, கட்சியை பலப்படுத்தி அடுத்த தேர்தலுக்கு முகம் கொடுப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (01) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மஹிந்த ராஜபக்ஷவே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவராவார். இந்த விடயத்தை தெரியாதவர்கள், இலங்கையில் வாழும் நபராக இருக்க முடியாது. மஹிந்த ராஜபக்ஷவை முதன்மையாகக் கொண்டே இந்த கட்சியும் உருவாக்கப்பட்டது. பாரிய நிகழ்வை முன்வைத்தே கட்சித் தலைமை பதவியையும் அவருக்கு வழங்கினோம். எனவே, அன்றும் இன்றும் என்றும் அவரே தலைவர். இது குறித்து யாருக்கும் எவ்வித சந்தேகமும் தேவையில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு அச்சம் கொண்டவர்களே, கட்சிப் பதவிகளில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என நினைக்கின்றனர். ஆனால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள், மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்கின்றனர். சூழ்ச்சிக்காரர்களுக்கே அந்த அச்சம் இருக்கின்றது.

சுயாதீனமாகவுள்ள சிறிய குழுக்களில், சூழ்ச்சிக்காரர்களும் இருக்கின்றனர். அறியாமையில் சென்றவர்களும் இருக்கின்றனர். அவ்வாறு அறியாமையில் சென்றவர்கள், தற்போது உண்மையை புரிந்துகொண்டு, நிலைமையை உணர்ந்து எம்மிடம் மன்னிப்பு கோரியுள்ளனர். கட்சிக்கு மீள வருவது குறித்து பேச்சு நடத்துகின்றனர். இவர்கள் குறித்து எமக்கு பிரச்சினை இல்லை. எனினும் சூழ்ச்சிக்காரர்கள் கட்சியிலிருந்து நீக்கப்படுவார்கள். அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கட்சியை பலப்படுத்தி, அடுத்த தேர்தலுக்கு முகம் கொடுப்போம். சூழ்ச்சிக்காரர்கள் யாரென்பது நான் பெயர் குறிப்பிட்டு கூற விரும்பவில்லை. அவர்கள் யாரென்பதும் அவர்களால் தவறாக வழிநடத்தப்பட்டவர்கள் யாரென்பதும் மக்களுக்கு தெரியும்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தான் விரும்பும் நேரத்துக்கு நாட்டுக்கு வருவதற்கான உரிமையுண்டு. அவர் இலங்கை பிரஜை. நாட்டின் பிரஜை மற்றும் முன்னாள் ஜனாதிபதி என்பதால் அவருக்கு தேவையான வசதிகளையும் பாதுகாப்பையும் வழங்குவதற்கு அரசாங்கத்துக்கு பொறுப்புள்ளது. அவர் விரும்பி கட்சியுடன் இணைந்தால் அவரை நாங்கள் ஏற்றுக்கொள்வோம் - என்றார்.

# கொரோனா தொற்றுப் பரவல் நிலைமை மீண்டும் தீவிரம்!

## எதிர்வரும் இரு வாரங்களில் நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமென பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எச்சரிக்கை



கொரோனா தொற்றுப் பரவல் மீண்டும் அதிகரித்துள்ளதால் அதுதொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போது நாட்டிலுள்ள நிலைமைக்கமைய எதிர்வரும் இரு வாரங்களில் நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்றும், துரதிர்ஷ்டவசமான மரணங்கள் பதிவாவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் நேற்று (01) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூக கட்டமைப்பின் அடிமட்டத்தில கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்துள்ளது. பாடசாலைகள், தொழில்புரியும் நிறுவனங்கள் உள்ளிட்ட மக்கள் ஒன்றுகூடும் பல்வேறு இடங்களில் கொரோனா தொற்று அறிகுறிகளுடன் நோயாளர்கள் அடையாளங்காணப்படுகிறார்கள். ஆனால் அவர்களை நோயாளர்களாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கான் என்ரிஜன் பரிசோதனை தொகுதி சகாதார அதிகாரிகள் பிரிவுகளில் இல்லை.

இதனால் நோயாளர்களை அடையாளங்காணும் நடவடிக்கைகளில் பாரதூரமான பிரச்சினைகள் எழுந்துள்ளன. நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் அறிகுறிகளுடன் இருக்கும் கொரோனா நோயாளர்களை அடையாளங்காணாமை, எரிபொருள் நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகிய பிரச்சினைகளினால் எதிர்வரும் இரு வாரங்களில் அதிகளவு கொரோனா நோயளர்களின் எண்ணிக்கை பதிவாகும்.

அவ்வாறு பாதிப்புக்குள்ளாகும் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கான அவசியமுள்ள, வேறு நோய்களினால் பாதிப்புக்குள்ளானவர்கள் குறித்து இதுவரை கவனம் செலுத்தவில்லை. அடிமட்டத்தில் இந்த நோயின் அறிகுறிகள் அதிகரித்துள்ளதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. அதனால். துரதிர்ஷ்டவசமான மரணங்கள் பதிவாகுவதற்கான வாய்ப்புகளும் அதிகமுள்ளன.

வைத்தியசாலைகளின் மருத்துவ வசதிகளில் காணப்படும் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் காணப்படுவதால் இந்த முறை பாரிய நெருக்கடிக்குள் நாம் தள்ளப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. தற்போது நாட்டில் காணப்படும் சமூக ஒன்றுகூடல்கள், குறிப்பாக எரிபொரு வரிசை போன்ற சமூக ஒன்றுகூடல்களில் ஈடுபடும்போது ஒவ்வொருவரும் தமது சுகாதார பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்த வேண்டும். அதேபோன்று சுகாதார வழிமுறைகளை கடுமையாக பின்பற்றுவதும் அவசியமாகும்.

இதுவரையில், தடுப்பசி பெற்றக்கொண்டிருக்கா விட்டால் மிக விரைவாக தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம் என்று குறிப்பிட்டார்.

# சீரற்ற காலநிலையினால் மழை நீரில் சிக்கி இருவர் உயிரிழப்பு



(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் நேற்று (01) பெய்த கடும் மழையினால் இருவர் உயிரிழந்துள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழகக்கோன் தெரிவித்தார்.

மண்சரிவு மற்றும் பாறைகள் சரிந்து வீதிகளில் விழுந்தமையால் பல வீதிகள் மூடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

அம்பகமுவ, பொல்பிட்டிய பிரதேசத்தில் நீரில் அடித்துச் செல்லப்பட்டதில் 61 வயதுடைய பெண் ஒருவரும் 05 வயதுடைய முன்பள்ளிச் சிறுமி ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

மேலும் மண்சரிவினால் ஹட்டன் - கொழும்பு வீதியில் கினிகத்தேன, தியகல பகுதியிலும் பாரிய மண்சரிவு இடம்பெற்றுள்ளது. இதேவேளை, தியகல பகுதியிலிருந்து கொத்மலை ஊடாக கம்பளை வீதி, மொரப்பே கோவிலுக்கு அண்மித்த பகுதியும் மூடப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை மற்றும் பலத்த காற்றினால் வட்டவளை பிரதேசத்தில் பல தாழ்நிலப் பகுதிகள் வெள்ளநீரில் மூழ்கியுள்ளதாகவும், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும் இதன்படி, தற்போது அபாய வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் வானிலை அறிவிப்புகளை அவதானித்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் எனவும் ஹட்டன்-கொழும்பு வீதியில் வாகனங்களை செலுத்தும்போது மண்சரிவு, பாறைகள் மற்றும் மரங்கள் விழும் அபாயம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# எரிபொருள் திருட்டுச் சம்பவங்கள்; 24 மணித்தியாலங்களில் 33 பேர் கைது

நாடு முழுவதும் பொலிஸாரால் நேற்றுமுன் தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது எரிபொருள் திருடி அதிக விலைக்கு விற்பனைக்காக வைத்திருந்த 33 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து ஆயிரத்து 108 லீற்றர் பெற்றோல், ஆயிரத்து 441 லீற்றர் டீசல், 09 லீற்றர் மண்ணெண்ணெய் ஆகியன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. இவற்றை பதுக்கிவைத்து அதிக விலைக்கு விற்பனை செய்வதற்கு சந்தேக நபர்கள் தயாராக இருந்துள்ளனர்.

இதேவேளை, கடந்த காலங்களில் எரிபொருளை பதுக்குவோரை கண்டறிவதற்காக ஆயிரத்து 220 சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன, இவற்றில் ஆயிரத்து 145 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சந்தேக நபர்களிடமிருந்து 38 ஆயிரத்து 29 லீற்றர் பெற்றோல், 12 ஆயிரத்து 945 லீற்றர் டீசல், 19 ஆயிரத்து 238 லீற்றர் மண்ணெண்ணெய் ஆகியன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

# புத்தளத்தில் QR முறைமையில் எரிபொருள் விநியோகம்






(ரஸீன் ரஸ்மின்)

நாடு முழுவதிலும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்றுமுதல் QR குறியீடுகளுடன் எரிபொருட்களை விநியோகிக்க எரிசக்தி அமைச்சு அறிமுகம்செய்துள்ளது.

அந்த வகையில் புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் மதுரங்குளி 10 ஆம் கட்டைப் பகுதியிலுள்ள சிபோட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுக் காலை 8.30 முதல் QR குறியீடுகளின் அடிப்படையில் பெற்றோல், டீசல் விநியோகிக்கப்பட்டன.

மோட்டார்சைக்கிள்களுக்கு 4 லீற்றர்களும், முச்சக்கரவண்டிகளுக்கு 5 லீற்றர்களும் மற்றும் கார்களுக்கு 20 லீற்றர்களும் விநியோகிக்கப் பட்டன.

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் 10 ஆம் கட்டைப் பிரதேசத்தில் வரிசையில் மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள் மற்றும் கார்கள் என நீண்ட வரிசையில் காணப்படுவதுடன், அரச ஊழியர்களுக்கென மற்றுமொரு வரிசையும் ஏற்பாடு செய்யப்பட்டு அவர்களுக்கும் பெற்றோல் விநியோகிக்கபட்டது.

இதேவேளை, ஒருசிலர் வரிசையை குழப்பிக் கொண்டு முன்னோக்கி வந்தமையினால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டதுடன் , பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுவரும் பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். மேற்படி QR குறியீடுகளை பரிசோதனை செய்து எரிபொருள் விநியோகிக்கப்படுவது புத்தளத்தில் வெற்றியளித்துள்ளதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# QR நடைமுறைமையின் கீழ் 50 இலட்சம் வாகனங்கள் பதிவு

நாட்டில் எரிபொருள் விநியோகத்துக்கென அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய எரிபொருள் அட்டை ஊடான கியூ.ஆர். முறைமைக்கு 50 இலட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வலுசக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்பிரகாரம் நாடு முழுவதிலும் உள்ள ஆயிரத்து 140 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக கியூ.ஆர். முறைமையில் எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத் துக்குரிய 964 நிலையங்கள் அடங்குவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


நேற்றுமுன்தினம் வரையில் 28 இலட்சத்து 91 ஆயிரத்து 260 மோட்டார்சைக்கிள்களும் 8 இலட்சத்து 76 ஆயிரத்து 158 முச்சக்கர வண்டிகளும் 6 இலட்சத்து 51 ஆயிரத்து 314 கார்களும் கியூ.ஆர். முறைமையின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்ட இணையத்தளத்தின் ஊடாக மாத்திரம் பதிவுசெய்யுமாறும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் திணைக் களம் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது

கியூ.ஆர். குறியீட்டின் மூலம் எரிபொருளை விநியோகிக்கும் நடைமுறை நேற்றுமுதல் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள் ளது.

# இஸ்லாம் கூறும் நற்செயல்களை முஹர்ரம் மாதத்திலிருந்து கடைப்பிடிக்குக!

## அமைச்சர் நஸீர் அஹமட் முஸ்லிம்களிடம் கோரிக்கை



(அஷ்ரப் ஏ. சமத்)

இஸ்லாம் கூறும் நற்செயல்களை வாழ்வில் கடைப்பிடிக்க முஹர்ரம் மாதத்திலிருந்து முன்வர வேண்டும் - என சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

முஹர்ரம் மாதப்பிறப்பைக் கொண்டாடும் விசேட நிகழ்வு நேற்று கொழும்பு சிவப்பு ஜும்ஆ பள்ளிவாசலில் இடம்பெற்றது. கலாசார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். இந்நிகழ்வுகள் முஸ்லிம் சமய விவகார திணைக்களத்தின் பணிப்பாளர் இப்ராஹிம் அன்சாரின் தலைமையில் நடைபெற்றது.

இதில் உரையாற்றிய அமைச்சர் நசீர் அஹமட் மேலும் தெரிவித்ததாவது,

முஸ்லிம் உம்மத்தின் கட்டுக்கோப்பு குலையாதிருப்பதையே அல்லாஹுத் தஆலா விரும்புகிறான். இதனை வலியுறுத்தும் வகையில் "நீங்கள் ஒருவருக்கொருவர் தீங்கிழைத்துக் கொள்ளாதீர்கள்" என்று திருமறை கூறுகிறது. இந்த இறைவசனம் பற்றி எமது இளைஞர்கள் சிந்திக்க வேண்டும். நாளாந்தம் சமூகவலைத்தளங்களிலும், முகநூல்களிலும் வசைபாடுவதையே சில இளைஞர்கள் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். இச்செயலை எமது மார்க்கம் ஓர் இறந்த மனிதனின் உடம்பை நாம் சாப்பிடுவதற்கு சமன். சற்று சிந்தியுங்கள். காலையில் எழுந்தவுடன் நாம் நமது இளைஞர்கள் சமூக ஊடக வலைத்தளங்களில் ஒருத்தரைப் பற்றி அவதூறு எழுதுவது என்பது பொல்லாத பாவமாகும்.

இது, எமது சமூகத்துக்குள் பிளவுகளை தோற்றுவிக்கிறது. ஒரு மனிதனை நோவினை செய்வது சர்வசாதாரணமாகிவிட்டது. இதற்கான தண்டனைகள் குறித்து இறைவன் எச்சரிக்கிறான். எனவே, சமூக வலைத்தளங்களில் நேரத்தை விரயமாக்காது, புனித குர்ஆனை விளங்க, படிக்க மற்றும் ஓதுவதற்கு நேரம் ஒதுக்குங்கள்.

புனித குர்ஆனின் அர்த்தங்களை படிக்க முனைந்தால், இந்த எச்சரிக்கை பற்றிய அச்சங்கள் எழும். குர்ஆனை படிப்பதற்கு அரபுமொழி தெரிந்திருக்கவேண்டுமென நினைக்காதீர்கள். ஆசையோடு முயற்சித்தால் அல்லாஹ் அருள்புரிவான். 1972இல், எனக்கு 11 வயதாக இருக்கும்போதுதான் புனித குர்ஆனை படிக்க வேண்டும் என்ற ஆசை வந்தது. இதே, பள்ளிவாசலில் "தறாவீஹ்" தொழுகையில் ஓதப்பட்ட "நீங்கள் உங்களுக்குள் தீங்கிழைத்துக் கொள்ளாதீர்கள்'' என்ற வசனமே இந்த ஆசையை ஏற்படுத்தியது. நாட்டில் இன்றுள்ள பொருளா தாரப் பிரச்சினை தீர்ந்து சுமுக நிலை ஏற்பட முஸ்லிம்கள் பிரார்த்திக்க வேண்டும் -என்றார்.

இலங்கையில் இன்றைய காலகட்டத்தில் நாம் பாரிய கஷ்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். ஆகவே நாம் வீணான விடயங்களில் நாட்டிற்கு பங்கம் விளைக்கும் செயல்களில் ஈடுபடக் கூடாது. ஆகவே நமது நாட்டின் ஸ்திரமான பொருளாரத்தினைக் கட்டியெழுப்புவதற்கு நாம் நமது உதவிகள், ஒத்தாசைகளை வழங்கல் வேண்டும். நமது நாட்டுக்கு உதவுவதற்கு தற்போதைய ஜனாதிபதி மத்தியகிழக்கு நாடுகள், ஜப்பான், சீனா, இந்தியா போன்ற பல்வேறு நாடுகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றார்.

முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய ஜனாதிபதியும் சர்வகட்சி ஆட்சிமுறையில் அரசாங்கம் அமைப்பதற்கு எதிர்க்கட்சியினருக்கு அழைப்பு விடுத்துள்ளார்கள். இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ள பொறுப்பு இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நாம் பாடுபடல் வேண்டும்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஓகஸ்ட் 02ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# குரங்கம்மை ஆபத்திலிருந்து தப்பிக்க நடவடிக்கை தேவை

உலகம் முழுவதும் குரங்கம்மை நோய் பரவும் அபாயம் உருவாகியுள்ள நிலையில், அண்டை நாடான இந்தியாவில் அந்த நோயினால் பாதிக்கப்பட்ட முதலாவது மரணம் பதிவாகியுள்ளது.

கேரளாவின் திருச்சூர் மாவட்டத்தைச் சேர்ந்த 22 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது மரணத்தையடுத்து, மாநில சுகாதாரத்துறை அவசரமாகக் கூடி தொற்றுநோயைத் தடுப்பது குறித்து விரிவாக கலந்துரையாடல் நடத்தியுள்ளது. உயிரிழந்த இளைஞருடன் தொடர்பில் இருந்தோரை உடனடியாக தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் நான்கு பேர் குரங்கம்மை நோயுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஸ்பெயினில் குரங்கம்மையால் பாதிக்கப்பட்டு இருவர் உயிரிழந்துள்ளனர்.

குரங்கம்மை வேகமாக பரவுவதை கட்டுப்படுத்தும் நோக்கில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நகரப்பகுதிகளில் மிக நெரிசலாக வாழக்கூடிய சுமார் ஒன்றரை இலட்சம் பேர் தொடர்பில் நிர்வாகம் அவதானத்தை செலுத்தியுள்ளது. சுகாதார கட்டுப்பாடுகளை உரிய முறையில் பேணுதல், விரைவாக தடுப்பூசிகளை பெற்றுக்கொடுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் நோய் பரவியுள்ளது.

உலகத்தில் 80 நாடுகளில் 22 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஆபிரிக்க நாடுகளில் 75 பேர் உயிரிழந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக நைஜீரியா, கொங்கோ ஆகிய நாடுகளில் இந்த நோய் தீவிரமாகப் பரவி வருகிறது.

ஆரம்பத்தில் 47 நாடுகளில் மூவாயிரத்து 40 பேர் மாத்திரமே இந்நோயால் பாதிக்கப்பட்டிருந்தனர். தற்போது அவ்வெண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு காணப்படுகிறது.

இந்நோயானது சின்னம்மை நோய்க்கான அறிகுறிகளுடன் கூடிய விலங்கினங்களிலிருந்து உருவாகும் நோய்த்தொற்று என்றும் சின்னம்மை அளவில் கடுமையானது அல்லவென்றும் சுகாதாரத்துறையினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மனிதர்களிலிருந்து விலங்குகளுக்கும், விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கும் பரவக்கூடிய தொற்று என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நோய் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கு, மத்திய ஆபிரிக்க நாடுகளில் காணப்படுகிறது. அண்மைக்காலமாக ஆபிரிக்க நாடுகளிலும், ஏனைய நாடுகளிலும் வேகமாக பரவி வருகின்றது.

இந்த வைரஸானது கடந்த ஐந்து ஆண்டுகளில் உருமாற்றம் அடைந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர் .

இந்நோய் பெரும்பாலும் ஓரினச் சேர்க்கையாளர்களான ஆண்களுக்கு அதிகம் பரவுவதாக தெரிவிக்கப்படுகிறது. ஆயினும், மருத்துவ ரீதியாக அது உறுதிப்படுத்தப்படவில்லை.

ஆபிரிக்க நாடுகளில் ஏற்கனவே கண்டறியப்பட்ட குரங்கம்மை நோய்க்கும், தற்போது உலகில் பரவும் நோய்க்கும் இடையில் வித்தியாசம் காணப்படுவதாக 'பிரிட்டிஷ் மெடிக்கல் ஜர்னல்' கடந்த வெள்ளிக்கிழமை அறிக்கையிட்டிருந்தது.

பிரித்தானியாவில் குரங்கம்மையால் பாதிக்கப்பட்ட 197 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் 'பிரிட்டிஷ் மெடிக்கல் ஜர்னல்' சில தகவல்களை வெளியிட்டிருந்தது. அதனடிப்படையில் 196 பேர் ஓரினச்சேர்க்கை பழக்கமுடையவர்கள் என்று தெரிவித்துள்ளனர்.

இவ்வாறானதொரு தொற்றுப்பரவல் 2007 முதல் 2011 ஆம் ஆண்டுவரை கொங்கோவிலும், 2017-2018 ஆம் ஆண்டுகளில் நைஜீரியாவிலும் இருந்ததாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வைரஸின் திரிபு மாற்றமடைந்துள்ளதால் பரவும் வேகமும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில் குரங்கம்மையால் பாதிக்கப்பட்ட எவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. அண்டை நாடான இந்தியாவில் இந்தத் தொற்றுடையோர் இனங்காணப்பட்டுள்ளதால் உள்நாட்டில் பரவும் ஆபத்து இல்லையெனக் கூறிவிட முடியாது.

கேரள சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ள கருத்துகளின் அடிப்படையில் அங்கு அடையாளம் காணப்பட்ட மூவர் வெளிநாட்டுத் தொடர்புகள் அற்றவர்கள் என்பதால், எவ்வாறு பரவியது என்பது குறித்து ஆராயப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளனர்.ஆக, இலங்கையில் சுகாதாரத்துறை மேலும் சீர்படுத்தப்பட்டு பாதுகாப்பு அரணுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக விமான நிலையத்தில் நோய்த்தொற்று குறித்த பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

நமது நாட்டை குரங்கம்மை தாக்கிவிடாது என்று கவனத்திற்கொள்ளாமல் இருந்துவிட்டால், பேராபத்து சூழ்ந்த பின்னர் பாதிப்பைத் தவிர்ப்பது மிகக் கடினமானதாகும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

# பிரபஞ்ச இரகசியம் சொல்லும் படங்கள்!

அண்மையில் ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கி அனுப்பிய படங்கள் உலகின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன.

சுட்டிக் காட்ட ஒண்ணாத பாழ்சூனியம்
தன்னைச் சூட்ச மதியால் அறிந்து தோடம் அறவே
எட்டிப் பிடித்தோம் என்(று)ஆ னந்த மாகப்பை
எடுத்து விரித்து நின்று ஆடு பாம்பே

என்று பாம்பாட்டிச் சித்தர் அன்று ஆனந்தமாகப் பாடியதைப் போலவே, விண்வெளி ஆர்வலர்கள் இன்று ஆனந்தப்படுகின்றனர்.

அமெரிக்காவின் நாசா விண்வெளி அமைப்பு, ஐரோப்பிய விண்வெளி முகாமை, கனடா விண்வெளி முகாமை, விண்வெளி தொலைநோக்கி அறிவியல் நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட படங்களில் ஐந்து படங்கள் முக்கியமானவை.

ஆதியாரம்ப பிரபஞ்ச முட்டைக்குள் 'குவார்க்குகள்' எனும் அடிப்படை இம்மிகள் வெடித்துச் சீறிப் பாய்ந்தன. அடர்த்தியான திரண்ட ஈர்ப்புவிசை மிக்க அந்தத் துகள்களில் வலுவான அணுக்கரு இடைவினைகள் பெருகியபோது அண்டவெளியில் 'ஹேத்ரொன் யுகம்' நிகழ்ந்தது என்கிறோம்.

அதனைத் தொடர்ந்து, பலவீன அணுக்கரு இடைவினைகளின் 'லெப்டான் யுக'த்தின் இறுதியில் நிகழ்ந்தது ஒரு 'மகாவெடிப்பு'. ஒரு நினைவுப் பொறியினும் மெலிதாக சுருக்கென்று ஒரு நொடிப் பொழுதினுள் மின்னி மறைந்தும் விட்டது.

'வெடிபடும் அண்டத்து இடிபல தாளம்' போட்டதன் சீற்றப் பரப்பில் 1,380 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய பிரபஞ்ச பொருட்களின் சிறு பகுதியை துல்லியமான ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கி படம்பிடித்துள்ளது.

யுகங்களாக, அண்டவெளியின் வெப்ப வாயுக்கள், அயனிகள், அணுத்துகள்கள் எல்லாம் மெல்ல மெல்ல ஆறிக் குளிர்ந்தன. மிகச் சிறிய அணுக்கருவான ஹைட்ரஜன் அணுக்கருக்களும், அதனின் நான்கு மடங்கு எடை கொண்ட ஹீலியம் அணுக்கருக்களும் நிரம்பி அலைமோதும் பிரபஞ்சக் கடல் விரிவடைந்தது.

விரிவடைந்த பிரபஞ்சம் தளர்ந்து சற்றுக் குளிரத் தொடங்கிற்று. 'பிரபஞ்ச விடிய'லில் அண்டவெளி எங்கும் இருள் கப்பிக்கொண்டது. ஆயினும், குளிர்ந்த முகில் விண்மீன்களில் நிறையீர்ப்பு விசை



அதிகரித்த வண்ணம் இருந்தது. அந்த வாயுக்கோளங்கள் இறுகி உள்ளுக்குள் அழுத்தமுற்று அக வெப்பநிலை உயர உயர அவற்றின் புறப்பரப்பில் வெப்ப அலைகள் கிளம்பின. அகக்கனற்சி உச்சத்தை எட்டியபோது விண்மீன் ஒளிவிட ஆரம்பித்தது.

ஹைட்ரஜன் அணுக்கருக்கள் பிணைந்து ஹீலியம் அணுக்கரு உற்பத்தி வினை முடுக்கப்பட்டது. இருண்ட பிரபஞ்ச கருப்பைக்குள் இருந்து விண்மீன்கள் பிரசவம் ஆயின. விண்மீன்கள் திரண்டு வளையமிட்டு உடுமண்டலங்கள் (கேலக்ஸி) ஆகச் சுழலத் தொடங்கின. சுருண்டவை, தட்டையான, நீள்வட்ட வடிவிலும், ஒழுங்கற்ற வடிவிலும் இருந்தன. அவற்றில் சிலவற்றின் மையப்பகுதியில் மொத் தென்று உயர்ந்த முண்டு உடுமண்டலங்கள் உருவெடுத்தன.

அத்தகைய உடுமண்டலம் ஒன்று 'ஆகாய கங்கை' என்ற பெயரில் சுட்டப் பெறுகிறது. 'பால்வீதி' என்றும் அதனை அழைக்கிறோம். அதுதான் நமக்கு தாய் மண்டலம்.

இருபதினாயிரம் கோடி சூரியன்கள் அடங்கிய அண்டச் சக்கரம் அது.

அதன் குறுக்களவு ஒரு இலட்சம் ஒளியாண்டு என்கிறோம். அதாவது, கண்ணிமைக்கும் நேரத்தில், வினாடிக்கு 3 இலட்சம் கிலோமீற்றர் வேகத்தில் பாயும் அசாதாரண வாகனம் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அதில் அமர்ந்து பால்வீதி அண்டத்தின் குறுக்காகப் பயணித்தால் ஒரு விளிம்பில் இருந்து, மறு விளிம்பினை அடைவதற்கு ஒரு இலட்சம் ஆண்டுகள் ஆகும்.

அது எப்படியாயினும், பூமியிலிருந்து 313 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள தெற்கு விண்மீன் கூட்டமான 'கரினா நெபுலா' என்ற விண்மீன் முகில் படலத்தினை வெப் தொலைநோக்கி அற்புதமாகப் பதிவிட்டுள்ளது. அதில் தென்படும் அண்டவெளி செங்குத்துப் பாறைத் தோற்றங்கள் (கொஸ்மிக் க்ளிஃப்ஸ்), விண்மீன்கள் உருவாக்கத்தின் ஆரம்ப கட்டங்களையும், விரைவான கட்டங்களையும் வெளிப்படுத்துகின்றன.s

கப்பல் அடித்தளம் போன்ற இந்தக் கரினா உடுத்தொகுதியில் 'அகத்தியர்' (கெனோபஸ்) விண்மீன் என்கிற ஒரு வெள்ளை நிற பெரும்பூத விண்மீன் உள்ளது. இரவு வானில் மிகப் பொலிவான விண்மீன்களில் இரண்டாவது பிரகாசமான நட்சத்திரம் இது. முன்னொரு காலத்தில் இதுதான் கடல் பயணிகளுக்கு விண்ணில் வழிகாட்டியாக இருந்ததாம்.

வெப் தொலைநோக்கி அனுப்பிய மற்றொரு படப்பதிவு, அண்ட காலத்தின் தொடக்கத்தில் உள்ள விண்மீன் திரள்களைக் கண்டுபிடிக்கும் வகையில் உள்ளது. ஏறத்தாழ 460 கோடி ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள 'தென்புலக் கன மிகு உடுத்திரள் கண்காணிப்பில்' சில தொலைதூர விண்மீன் திரள்களைக் கண்டறிய முடிந்தது.

இது அண்டவெளிக் கருவறையில் நம் சூரிய குடும்பம் பிரசவம் ஆன அதே காலகட்டத்தினை தொன்மையான நினைவலைகள் என்றும் இங்கு அசைபோடலாம். பின்னர் கோள்கள், குறுங்கோள்கள், கோளாங்கற்கள், வால்விண்மீன்கள் என அனைத்துக் குஞ்சுக் குலுவான்களும் சூரிய மையத்தைச் சுற்றத் தொடங்கின.

இதில் ஆச்சரியம் என்னவென்றால், வெப் தொலைநோக்கி, விரிகோணத்தில் புறக்கோள்களைத் தேடி வலைவீசியபோது, ஃபீனிக்ஸ் உடுக்கணத்தில் 'வாஸ்ப்-96பி' என்று பெயரிடப்பட்ட வாயு இராட்சத வெளிக்கோள் ஒன்றினைக் கண்டுபிடித்தது.

அந்தக் கோளின் நிறை 1,000 கோடி கோடி கோடி தொன் ஆகும். அதாவது அக்கோள், பூமியைக்காட்டிலும் 160 மடங்கு எடை மிகுந்ததாகும்.

அது, 5200 - 6000 பாகை புற வெப்பம் உடைய 'வாஸ்ப்-96' என்று பெயர் சூட்டப்பெற்றதோர் விண்மீனை ஏறத்தாழ 67 இலட்சம் கி.மீ. தொலைவில் சுற்றி வருகிறது. இது புதனுக்கும், சூரியனுக்கும் இடையிலான தூரத்தில் ஒன்பதில் ஒரு பங்கு. அவ்வளவு அருகில் உள்ளதால், அதன் தாய் விண்மீனை 3.4 நாட்களுக்கு ஒரு முறை என்ற அட்டவணைப்படி அதி விரைவாகச் சுற்றி வருகிறது என்றால் பாருங்களேன்.

விண்வெளி தொலைநோக்கியின் நிறமாலையளவி, அந்த வேற்றுக் கிரகத்தின் வளிமண்டலத்தில் நீர் கொண்ட மேகங்களும், மூடுபனிகளும் வீக்கமாகத் தென்படுவதை உறுதிப்படுத்தியுள்ளது.

பூமியிலிருந்து சுமார் 1,120 ஒளி ஆண்டுகள் தொலைவில், தெற்கு வானத்தில் ஃபீனிக்ஸ் விண்மீன் உள்ளது. அது, தனது சொந்த சாம்பலில் இருந்து உயிர்த்து எழும் புராணப் பறவையான ஃபீனிக்ஸ் பெயரால் சித்தரிக்கப்படுகிறது. இந்த பீனிக்ஸ், பாவோ (மயில்), டுகானா (டூக்கன்), க்ரஸ் (கொக்கு) ஆகிய நான்கு விண்மீன்களும் கூட்டாக 'தெற்கு பறவைகள்' என்று அழைக்கப்படுகின்றன. இவற்றை அமெரிக்கா, ஐரோப்பா, சீனா போன்ற மத்திய - வடக்கு அட்சரேகை பகுதியில் உள்ள நாடுகளில் இருந்து பார்க்க முடியாது.

இதில் இன்னொரு அறிவியல் செய்தி என்னவென்றால், உடுமண்டலத் திரளில், அடர்த்தியான 'இருண்ட பொருள்' ஒன்று இடம்பெறும். அது ஒரு நிறையீர்ப்பு வில்லையாக ஒளியின் பாதையை வளைக்கப் போதுமான ஈர்ப்பு விசையை உருவாக்குகிறது.

1936ஆம் ஆண்டிலேயே, இத்தகைய நிறையீர்ப்பு லென்ஸ் குறித்து தீர்க்கதரிசனமாக அறிந்திருந்தவர் உலகப் புகழ் பெற்ற அறிவியல் அறிஞர் எல்பர்ட் ஐன்ஸ்டீன். அண்டவெளியின் நிறையீர்ப்பு வில்லையாகச் செயற்படும் கனத்த உடுத்திரள் வழியே, அப்பாலுள்ள மங்கலான உடுத்திரள்களையும் பெரிதாக்கிக் காணலாம்.

உயர் வரையறை தொலைக்காட்சி (எல்.இ.டி டிவி) திரைக்கான பொதுவான அளவு, அகல, உயர வாக்கில் 1920 - 1080 நுண்படக் கூறுகள் (பிக்சல்கள்) ஆகும். மொத்தத்தில், ஏறத்தாழ 20 இலட்சம் படக்கூறுகள்.

நாசாவின் ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கி அனுப்பியுள்ள மிகப்பெரிய படமாக நான்கு விண்மீன் திரள்கள் அடங்கிய 'ஸ்டீபனின் குயின்டெட்' என்கிற படம் உள்ளது. இந்தப் படம், நிலவின் விட்டத்தில் ஐந்தில் ஒரு பகுதி (750 கி.மீ.) அளவினை உள்ளடக்கிய மகத்தான படமாகும். இது 15 கோடி படக்கூறுகளைக் கொண்டுள்ளது என்பது சாதாரண செய்தியல்ல. நவீன தொழில்நுட்பத்தின் உச்சம் ஆகும்.

வடக்கு வானில் 'பறக்கும் குதிரை' என்று சுட்டப்பெறும் 'பெகாசஸ்' விண்மீன் தொகுப்பில் காணக்கூடிய இந்த நான்கு திரள்களை 1877-இல் மார்சேய் வானாய்வகத்தில் இருந்து எட்வர்ட் ஸ்டீபன் கண்டுபிடித்தார் என்பது தனிக்குறிப்பு.

'பறக்கும் குதிரை' எனப்படும் 'பெகாசஸ்' விண்மீன் உடுத்தொகுதி விஞ்ஞானிகளுக்குக்கூட, இதற்கு முன் எப்போதும் இல்லாத நிலையில் புதிய முறையில் அறிவூட்டி இருக்கிறது. ஒரு கருந்துளைக்கு அருகிலுள்ள வாயு, எவ்வாறு கலக்கப்படுகிறது என்பதை அது உணர்த்துகிறது. மேலும், விண்மீன் திரள்கள் ஒன்றுக்கொன்று எவ்வாறு நட்சத்திர உருவாக்கத்தைத் தூண்டிவிடுகின்றன என்பதையும் வெப் தொலைநோக்கி அனுப்பிய படங்கள் விவரிக்கின்றன.

விண்மீன்களின் கருவறையை மட்டுமன்றி, 2,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் ஒரு விண்மீனின் கல்லறையையும் முதல் முறையாக வெப் தொலைநோக்கி உலகின் முழுப் பார்வைக்கு கொண்டு வந்துள்ளது.

பொதுவாக, சூரியனைக் காட்டிலும் எட்டு மடங்கு வரை நிறைகொண்ட சிறிய ரக விண்மீன்கள் வெடித்துச் சிதறும் 'சூப்பர்நோவா' நிகழ்வின் இறுதியில், சந்திரன் அளவுக்கு சிறியதொரு வெள்ளைக் குறளை விண்மீன் மிச்சமாகும்.

8-30 சூரிய நிறை உடைய நடுத்தர விண்மீனில் இருந்து, வெறும் 20 கிலோமீற்றர் வரை குறுக்களவு கொண்ட, அடர்த்தி மிக்க 'நியூட்ரான் விண்மீன்' தோன்றும். அது மட்டுமல்ல, சூரியனைப் போல் 30 மடங்கு நிறை உடைய அதிக கனமான விண்மீன் வெடிப்பில் கருந்துளை விண்மீன் பிறக்கும். இது நொடிக்கு 3 இலட்சம் கிலோமீற்றர் வேகத்தில் பாயும் ஒளியைக் கூட வெளியே விடாத அதீத நிறையீர்ப்புத் துளையாகும்.

தெற்கு வளைய நெபுலாவில் இத்தகைய இறக்கும் விண்மீன் ஒன்றை வெப் தொலைநோக்கியின் சக்தி வாய்ந்த அகச்சிவப்பு கருவி படம்பிடித்துள்ளது.

அன்றைக்கே 'அண்டங்கள் எல்லாம் அணுவாக அணுக்கள் எல்லாம் அண்டங்களாகப் பெரிதாய் சிறிதாயினா னும்...' என்று திருவிளையாடற் புராணத்தில் (பாயிரம்: 6) பரஞ்சோதியார் பாடியிருப்பது வியப்பளிக்கிறது.

ஒளி வேகத்தில் விரையும் மனிதனுக்கு நிறை என்பது இருக்காது. அவ்வாறே, அதீத நிறையீர்ப்பின்போது, காலக்கடிகாரமும் இயங்காது. இதுதான் பிரபஞ்ச இரகசியம்.

**நெல்லை சு. முத்து**
**இஸ்ரோ விஞ்ஞானி**

*(நன்றி - தினமணி)*

## இன்றைய நாளில்...

- 1790 - ஐக்கிய அமெரிக்காவில் முதல் தடவையாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது.
- 1858 - இந்தியாவில் கம்பனி ஆட்சி முடிவுக்கு வந்து பிரித்தானிய அரச ஆட்சி நடைமுறைக்கு வந்தது.
- 1870 - உலகின் முதலாவது சுரங்கத் தொடருந்து சேவை லண்டனில் தொடங்கப்பட்டது.
- 1918 - கனடிய வரலாற்றில் முதல் தடவையாக பொது வேலைநிறுத்தம் வான்கூவர் நகரில் இடம்பெற்றது.
- 1922 - சீனக் குடியரசைத் தாக்கிய சூறாவளியில் 50,000 பேர் வரை உயிரிழந்தனர்.
- 1932 - பொசிட்ரொன் (இலத்திரனின் எதிர்மின்னி) கார்ல் எண்டர்சன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1934 - ஹிட்லர் ஜேர்மனியின் அரசுத்தலைவரானார்.
- 1989 - 1989 வல்வெட்டித்துறைப் படுகொலைகள்: யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 63 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

1990 - ஈராக் குவைத்தின் மீது படையெடுத்தது. வளைகுடாப் போர் ஆரம்பமானது.

1994 - பலாலி இராணுவத்தளத்தை விடுதலைப் புலிகள் தாக்கியதில் உலங்கு வானூர்தி, கவச வண்டி என்பன தாக்கியழிக்கப்பட்டன.

2006 - திருகோணமலை மாவட்டத்தில் மஹிந்தபுர, கிளிவெட்டி, பாலதோப்பு, பச்சனூர் இராணுவ முகாம்களைத் தாக்கி மூதூர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் நுழைந்தனர்.

## நக்கல் நமசிவாயம்

**அடுத்த 9 ஆம் திகதிக்கு முன்னர் எரிபொருள், சமையல் எரிவாயு விலைகளைக் குறைச்சு, தட்டுப்பாட்டை நிவர்த்தி செஞ்சால் அரசாங்கத்துக்கு எதிராக யார் போராட வரப்போறாங்கள் என்று ரணில் நினைக்கிறார் போல..!**



# கடல்மார்க்கமாக பிரான்ஸ் செல்ல முற்பட்ட 47 பேர்

## கடற்படையினரால் அதிரடியாக கைது

## வென்னப்புவவில் 39 பேரும் பஸ்ஸில் பயணித்த எண்மரும் சிக்கினர்

(ஜுட் சமந்த)

கடல்மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் பிரான்ஸ் நாட்டுக்குச் செல்வதற்குத் தயாராகவிருந்த நிலையில் 47 பேர் வென்னப்புவ பகுதியில் வைத்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து வென்னப்புவவில் தங்கியிருந்த 39 பேர் கைதுசெய்யப்பட்டதுடன், அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் மேலும் எண்மர் பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்தபோது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



இவ்வாறு கைதுசெய்யப்பட்டோரில் ஆறு பெண்களும் மூன்று சிறுவர்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்களை வென்னப்புவ பகுதிக்கு அழைத்துவந்ததாக சந்தேகிக்கப்படும் மூன்று வேன்கள் பொலிஸாரால் அடையாளங்காணப்பட்டுள்ளன. இந்த சந்தேக நபர்கள் மட்டக்களப்பு, சிலாபம், மாரவில, திருகோணமலை, வவுனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பிரான்ஸ் நாட்டுக்கு கடல்மார்க்கமாகச் செல்வதற்கு பெருந்தொகைப் பணத்தை இவர்கள் பிற நபர்களுக்கு செலுத்தியுள்ளனர். இவ்வாறு மனிதக் கடத்தலில் ஈடுபடும் பிரதான சந்தேக நபரைத் தேடி கைதுசெய்வதற்கு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த வாரங்களில் வென்னப்புவ மற்றும் மாரவில பகுதிகளில் வெளிநாட்டுக்குச் செல்லும் நோக்கில் தங்கியிருந்த பலர் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# புதிய கட்டமைப்பின் கீழ் ஒன்றிணைந்த தேசிய வலைத்திட்டமொன்றை உருவாக்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு

தற்சமயம் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான வழிமுறைகள் குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. ஆனால், அமைச்சுப் பதவிகளை பகிர்ந்து கொள்ளும் அரசியல் சூதே இத்தகைய பல கலந்துரையாடல்களில் காணக்கிடைப்பதாகவும், இந்நேரத்தில், தன்னைப் பற்றி சிந்திப்பதை விட நாட்டைப் பற்றி சிந்திப்பதே இடம்பெற வேண்டும். அமைச்சர்களின் எண்ணிக்கைகளை அதிகரித்து நாட்டுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தாது, புதிய கட்டமைப்பின் கீழ் தேசிய ஒன்றிணைந்த வேலைத்திட்டமொன்றை எட்ட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (01) நடைபெற்ற ஒன்றிணைந்த கிராம உத்தியோகத்தர்கள் சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாடு குறித்து சிந்திக்கவும், நாட்டுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய தருணமும் வந்துள்ளது.

சுயநலத்திற்கு பதிலாக, பரோபகார மனோபாவமும் சந்தர்ப்பவாதத்திற்கு பகரமாக நாட்டு மக்களைப் பற்றி சிந்திக்கும் மனோபாவமும் வேண்டும். சலுகைகள், வரப்பிரசாதங்களைப் பெற்று மக்கள் மீது சுமையை ஏற்றுவதற்கு பதிலாக அறிவார்ந்த முறையில் நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முன்வர வேண்டும்.

ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு சகல கட்சிகளும், எதிர்க்கட்சிகளும், நாடாளுமன்ற குழு அமைப்பின் ஊடாக சாதகமான பங்களிப்பை வழங்க முடியும். வரப்பிரசாதங்களை பெற்று கூடிய சுகபோக வாழ்க்கை வாழ்வதற்கு இது நேரமல்ல. தற்சமயம் பங்கேற்பு அபிவிருத்தி மூலம் நாட்டை கட்டியெழுப்புவதே மேற்கொள்ளப்பட வேண்டும்.

இது தொடர்பில் தானும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி நம்பிக்கை கொள்வதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருடன் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் சந்திப்பு



இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) உமர் பாரூக் புர்கி, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியை அமைச்சில் வைத்து மரியாதை நிமித்தம் சந்தித்தார். இந்தச் சந்திப்பு கடந்த ஜூலை 29ஆம் திகதி இடம்பெற்றதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அபிவிருத்தியடைந்துவரும் இருதரப்பு உறவுகள் குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கலந்துரையாடியதுடன், பல துறைகளில் நடைபெற்றுவரும் ஒத்துழைப்பு குறித்து திருப்தியை வெளிப்படுத்தினார். இரு வழி உறவுகளை வலுப்படுத்துவதற்கான வழிமுறையாக மக்களுக்கு இடையிலான தொடர்புகளை வலுப்படுத்துவதற்கு அவர்கள் தீர்மானித்தனர்.

பல்வேறு பிராந்திய மற்றும் சர்வதேச அரங்குகளில் கடினமான காலங்களில் பாகிஸ்தான் அரசாங்கம் வழங்கிய உறுதியான மற்றும் நிலையான ஆதரவை அமைச்சர் பாராட்டினார்.



நாவலப்பட்டி - கினிகத்தேனை பிரதான பாதையில் மீபிட்டிய பகுதியில் நேற்று பிற்பகல் மண்சரிவு ஏற்பட்டதால் வாகனப் போக்குவரத்துகளுக்கு இடையூறு ஏற்பட்டது.

# மரம் முறிந்து விழுந்ததில் பஸ் பகுதியளவில் சேதம்





(தலவாக்கலை நிருபர்)

தலவாக்கலை பஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸின் மீது நேற்று (01) பாரிய மரமொன்று முறிந்து விழுந்துள்ளது.

இவ்வாறு மரம் முறிந்து விழுந்ததில் பஸ் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. பஸ் நிலையத்திலிருந்த இந்த மரம் கடும் மழை காரணமாக முறிந்து வீழ்ந்துள்ளதாகவும் இதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நேரத்தில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக நிறுத்தப்பட்டிருந்த பஸ்ஸின் மீதே குறித்த மரம் விழுந்துள்ளது. அதிகளவான மக்கள் கூடும் இடத்தில் இந்தப் பெரிய மரம் முறிந்து விழுந்த சந்தர்ப்பத்தில் கடும் மழை பெய்ததாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

# கூட்டணியின் தலைமைப் பதவியில் மனோ எம்.பி. தொடர்ந்தும் நீடிப்பார்

## தமக்குள் பிளவுகள் கிடையாதென இராதா எம்.பி. நுவரெலியாவில் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)



"தமிழ் முற்போக்கு கூட்டணியானது, தேர்தலை மாத்திரம் இலக்குவைத்து செயற்படும் கூட்டணி கிடையாது. அது மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கும் கூட்டணியாகும். எனவே, தலைமைப் பதவியில் மனோ கணேசன் நீடிப்பார். ஒன்றிணைந்த எமது பயணம் தொடரும்" - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான பீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று (01) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

" சர்வகட்சி அரசமைப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். நாட்டின் நலன்கருதி இதில் இணையுமாறு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். சர்வகட்சி அரசையே நாடும், சர்வதேசமும்கூட எதிர்பார்க்கின்றன. நாமும் அதனை வரவேற்கின்றோம்.

சர்வகட்சி அரசு சம்பந்தமாக மலையக மக்கள் முன்னணி சாதகமான நிலைப்பாட்டில் இருந்தாலும், தமிழ் முற்போக்கு கூட்டணியாக எடுக்கப்படும் முடிவே அறிவிக்கப்படும்.

தமிழ் முற்போக்கு கூட்டணி எதிர்வரும் 03ஆம் திகதி கூடவுள்ளது. அதன்பின்னரே சர்வகட்சி அரசில் இணைவதா அல்லது எமது வகிபாகம் எவ்வாறு அமையும் என்பது குறித்து அறிவிக்கப்படும்.

தமிழ் முற்போக்கு கூட்டணி என்பது தேர்தலுக்காக முளைத்த கூட்டணி அல்ல. அது மக்களுக்கான - கொள்கை அடிப்படையிலான கூட்டணி. எமது கூட்டணிக்குள் எவ்வித பிளவும் இல்லை. ஓரணியில் எமது பயணம் தொடரும். கூட்டணியின் தலைமைப் பதவியில் நீடிக்குமாறு மனோ கணேசனிடம் நாம் கேட்டுக்கொண்டுள்ளோம். எமது மக்களுக்கான வேலைத்திட்டத்தை கூட்டாக முன்னெடுப்பதே சிறந்ததாக அமையும்.

சர்வகட்சி அரசு சம்பந்தமாகவே தற்போது பேசப்படுகின்றது. மாறாக அமைச்சுப் பதவி பற்றி பேசப்படவில்லை. உரியநேரத்தில் அதற்கான கலந்துரையாடல் இடம்பெறும்" - என்றார்.

# இரத்தினபுரி நகரில் ஆணின் சடலம் மீட்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி சன்னஸ்கம எரிபொருள் நிலையத்துக்கு அருகில் ஆணின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து இச்சடலம் புதர்களுக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளது. இச்சடலத்தை அடையாளங்காண பொதுமக்களின் உதவியை பொலிஸார் நாடியுள்ளனர்.

# கொழும்பில் நட்சத்திர ஹோட்டலின் அறைகளை பலவந்தமாக பயன்படுத்திய போராட்டக்காரர்கள்

## பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பில் நட்சத்திர ஹோட்டலொன்றில் பலாத்காரமாக தங்கியிருந்ததாகக் கூறப்படும் போராட்டக்காரர்களை கைதுசெய்வதற்காக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த ஹோட்டலில் மூன்று அறைகளை அவர்கள் பெற்றுக்கொண்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இது தொடர்பில் ஹோட்டல் முகாமைத்துவத்திடம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

காலிமுகத்திடல் போராட்டத்தின் ஆரம்ப காலம்முதல் ஹோட்டலின் மூன்று அறைகளை இந்நபர்கள் பயன்படுத்தியுள்ளனர். இது தொடர்பிலான கண்காணிப்புக் கெமராக்களின் காட்சிகளும் பொலிஸாரால் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

போராட்டம் என்ற பெயரில் பணம் செலுத்தாமல் குறித்த நபர்கள் அங்கு தங்கியிருந்துள்ளதாக தெரியவந்துள்ளது. சந்தேக நபர்களை அடையாளம் கண்ட பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# இங்கிரிய உதயம் இளைஞர் மன்றத்தால் எரிபொருள் வழங்க QR வழங்கிவைப்பு



இங்கிரிய பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்கான அனுமதிப்பத்திரம் பெறாத பயனாளர்களுக்கான இலவச கியூ.ஆர். குறியீடு வழங்கும் நிகழ்வு, இங்கிரிய இளைஞர் மன்றத்தின் பிராந்திய சபையின் சார்பில் றைகம் மேற்பிரிவு சனசமூக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இங்கிரிய இளைஞர் சேவையின் பணியாளர் சிந்தக மகேஷ் கன்கந்தவின் தலைமை ஒருங்கமைப்பில், இங்கிரிய, றைகம உதயம் இளைஞர் மன்றத்தின் தலைவர் துசாந்தன் மற்றும் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் ஸ்ரீநாத் உள்ளிட்ட மன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் பெருந்திரளானோர் கலந்துகொண்டதுடன், பயனாளர்களுக்கு கியூ.ஆர். குறியீடும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், கியூ.ஆர். குறியீடு அச்சிடுவதற்கான அனுசரணை வழங்கிய இளைஞர் மன்ற மண்டல வாரியத்தின் முன்னாள் துணைத் தலைவர் சசித் ஜீவந்த மற்றும் தொழில்நுட்பவியலாளர்களான இளைஞர் கழக பிராந்திய சபையின் தலைவர் மதுக சதுரங்க, துணைச் செயலாளர் கசுனி ஷானிகா மற்றும் பெத்தும் அனுலசித் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 01.08.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 136 8 28 | 148 4604 |
| கனேடியன் டொலர் | 166 2651 | 178 8820 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 001 | 44 1316 |
| யூரோ | 252 7 57 | 267 4438 |
| ஜப்பான் யென் | 1 5740 | 1 6811 |
| சிங்கப்பூர் டொலர் | 146 3648 | 157 3246 |
| ஸ்ரேலிங் பவுன் | 322 2068 | 34 5816 |
| சுவிஸ் பிரான்ங் | 262 5742 | 28 6 80 |
| ஐ.அ.டொலர் | 246 1642 | 257 4 53 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 846 4105 |
| குவைட் | குவைட் தினார் | 0,064 555 |
| ஓமான் | ஓமான் றியால் | 826 54 1 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 1630 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 0018 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 1710 |




## மலையகத்தில் கடும் மழை

# ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் மண்சரிவு: மரம் முறிந்து விழுந்து போக்குவரத்துக்கு பாதிப்பு






(மஸ்கெலியா, அவிசாவளை, கினிகத்தேனை நிருபர்கள்)

மலையகத்தில் தற்போது கடும் மழை பெய்துவருகிறது. அந்தவகையில், நேற்றுமுன்தினம்(31) இரவு முதல் கடும் மழை பெய்து வருவதால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

ஹட்டன் - கொழும்பு, ஹட்டன் - நுவரெலியா மற்றும் ஹட்டன் - பொகவந்தலாவை உள்ளிட்ட பல வீதிகளில் மண்சரிவுகள் ஏற்பட்டு, போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று அதிகாலை 5.30 மணியளவில் ஹட்டன் - கொழும்பு பிரதான வீதி கிதுல்கல பகுதியில் கடும்மழையினால் பாரிய மரமொன்று முறிந்து விழுந்துள்ளது. இது மின்கம்பி மீது விழுந்து சேதமடைந்ததால் குறித்த பாதையுடனான போக்குவரத்தும் பாதிப்படைந்துள்ளது.

இதனால் பிரதான பாதையில் வாகன நெரிசல் ஏற்பட்டதுடன் காலை வேளையில் தொழிலுக்கு செல்வோர் பெரும் அசௌகரியத்திற்குள்ளாயினர்.

காசல்ரீ, மவுசாக்கலை, கெனியோன், விமலசுரேந்திர, லக்ஸபான, நவலக்ஸபான, மேல் கொத்மலை உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர் மட்டமும் மிக வெகுவாக உயர்ந்துள்ளன. மேலும் கலுகல, பிட்டவல, கினிகத்தேனை, கடவலை, வட்டவளை, ஹட்டன், குடாகம, கொட்டகலை, சென்கிளையார், தலவாக்கலை, ரதல்ல, நானுஓயா உள்ளிட்ட பகுதிகளிலும் பனிமூட்டம் நிலவுவதாகவும் இவ்வீதிகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் அவதானமாக செயற்படும் அதேவேளை, நீர்த்தேக்கங்களுக்கு கீழ் தாழ் நிலப்பகுதிகளில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் இணைந்த கணித பாட ஆசிரியர் இடமாற்றம்

## ம.மா.ஆளுநரின் கவனத்திற்குகொண்டு செல்லப்படும் - கணபதி கனகராஜ்

(தலவாக்கலை நிருபர்)



தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் இணைந்த கணித பாட ஆசிரியர் இடமாற்ற விடயம் மத்திய மாகாண ஆளுநரின் கவனத்திற்குகொண்டு செல்லப்படும் என முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் காங்கிரஸ் கல்வியல் ஒன்றியத்தின் தலைவருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் சுமார் 75 மாணவர்கள் இணைந்த கணித பாடநெறியை உயர்தரத்தில் பின்பற்றுபவர்களாக இருக்கின்றனர். இப்பாடநெறியை கற்பிப்பதற்காக பாடசாலையில் ஒரே ஒரு ஆசிரியரே கடமையாற்றி வந்திருக்கிறார். இந்நிலையில் பாடசாலை அதிபர், வலய கல்விப் பணிமனை அனுமதிக்காத நிலையில் குறித்த ஆசிரியர் பிறிதொரு மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.

ஆசிரியர் ஒருவர் இடமாற்றம் செய்யப்படும் போது அவருக்காக இன்னொரு பதில் ஆசிரியர் நியமிக்கப்பட்ட பின்பே இடமாற்றம் செய்வது நடைமுறையாகும். அவ்வாறு பதில் ஆசிரியர் நியமிக்க முடியாவிட்டால் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற போது குறிப்பிட்ட ஆசிரியரை இடமாற்றம் செய்ய முடியாது. நுவரெலியா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கணித, விஞ்ஞான பாட நெறிகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால் கடந்த காலங்களில் பல பாடசாலைகளில் கணித விஞ்ஞானப் பிரிவுகள் மூடப்பட்டிருக்கின்றன.

நுவரெலியா கல்வி வலயத்தில் பல பாடசாலைகளிலிருந்து மாணவர்களை உள்வாங்கக்கூடிய மத்திய இடத்தில் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம் அமைந்திருக்கிறது. இப்பாடசாலையிலும் கணித, விஞ்ஞானப் பிரிவுகளை மூட வேண்டிய நிலையை மத்திய மாகாண கல்வித் திணைக்களம் ஏற்படுத்தக்கூடாது.

இக்குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு மேலும் ஆசிரியர்களை வழங்கி பிரதேச மாணவர்களின் கல்விக்கு உற்சாகம் அளிக்க வேண்டும். எனவே, குறிப்பிட்ட பாடசாலையில் பணிபுரியும் இணைந்த கணித பாட ஆசிரியரை இடமாற்றம் செய்வதாக இருந்தால் அவருக்காக இன்னொரு பதில் ஆசிரியர் ஒருவரை நியமித்து விட்டு குறிப்பிட்ட ஆசிரியரை விடுவிப்பதில் பாடசாலை சமூகத்திற்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாது. இவ்விடயம் சம்பந்தமான தெளிவான விளக்கங்களை மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவை சந்தித்து காங்கிரஸ் கல்வியல் ஒன்றியம் எடுத்துரைக்கும் என்றார்.

# முகக்கவசம் அணிதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது

இலங்கையில் கொரோனா தொற்று மீண்டும் வேகமாக பரவ ஆரம்பித்துள்ள நிலையில், முகக் கவசங்களை உரியமுறையில் அணியுமாறு, பொதுமக்களிடம் ஹட்டன்- டிக்கோயா நகரசபையின் தவிசாளர் சடையன் பாலசந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அவர், கொரோனா தொற்றிலிருந்து பிரதேசவாசிகளை பாதுகாப்பதற்கு அனைவரது ஒத்துழைப்பும் மிகவும் அவசியமாகும். எனவே ஹட்டன்- டிக்கோயா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களும் ஹட்டன் நகருக்கு வருகை தருபவர்களும் கட்டாயமாக முகக்கவசம் அணிய வேண்டும்.

அத்துடன், கைகளை சவர்க்காரம் கொண்டு கழுவி சுத்தமாக வைத்திருப்பதுடன் சுகாதாரத்துறையினரால் பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகளையும் கடைபிடிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# மவுசாக்கலையில் சுயதொழிலை மேம்படுத்த தையல் தொழிற்பயிற்சி நிலையம் திறந்துவைப்பு

(செ.தி.பெருமாள்)




நாட்டில் உள்ள அசாதாரண சூழ்நிலையில் இளைஞர் யுவதிகளின் சுயதொழில் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கிலும் பாடசாலை கல்வியை தொடர்ந்து தொழிற்கல்வியை வழங்கும் நோக்கிலும் ஐ.எம்.எச்.ஓ(IMHO) நிறுவனத்தின் சுயத்தொழில் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மவுசாக்கலை 320ஐ கிராம சேவகர் பிரிவில் அண்மையில் தையல் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

ஐ.எம்.எச்.ஓ. நிறுவனத்தின் முகாமையாளர் கந்தையா விக்னேஷ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக அம்பகமுவ பிரதேச செயலாளர், மஸ்கெலியா பிரதேச சபை தவிசாளர் பு.செண்பகவள்ளி மற்றும் உறுப்பினர்களான ஆ.ஆனந்தன், யோகேந்திரன், பொலிஸ் நிலையத்தின் தலைமை பொறுப்பதிகாரி மற்றும் அதிகாரிகள், மவுசாக்கலை பிரிவு கிராம உத்தியோகத்தர் ஆ.சௌந்தர், கிராம அபிவிருத்தி சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர் ரொமேஸ் தர்மசீலன், பாடசாலை அதிபர்கள், ஐ.எம்.எச்.ஓ நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

குறித்த நிலையத்தின் ஊடாக பயனடையும் மவுசாக்கலை, பிரவுன்லோ, கிறவன்எலிய ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை சேர்ந்த நூற்றுக்கணக்கான பெண்கள் இதன்போது இணைந்து கொண்டனர்.

மவுசாக்கலை பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த பயிற்சி நிலையத்தைபோல நமது பிரதேசத்தில் சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் பயிற்சி நிலையங்களை அமைத்து அதன் ஊடாக இளைஞர் யுவதிகளின் தொழிற்கல்வியை மேம்படுத்த ஐ.எம்.எச்.ஓ நிறுவனத்தின் ஊடாக முழுமையாக முயற்சிப்பதாக இதன்போது குறித்த நிறுவன முகாமையாளர் கருத்து தெரிவித்தார்.

இளைஞர் யுவதிகளின் எதிர்காலம் கருதி முன்னின்று சேவை வழங்கும் ஐ.எம்.எச்.ஓ நிறுவனம் மற்றும் இந்த வேலைத்திட்டத்திற்காக முழுமையாக ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கு மவுசாக்கலை பிரிவு பொதுமக்கள் விசேடமான நன்றிகளை தெரிவிக்கின்றனர்.

# பேரினவாத காடையர்களினால் ஏற்படுத்தப்பட்ட கறுப்பு ஜூலை தழும்புகள் இன்னும் மாறவில்லை

## ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் ஜீவன்




இந்த நாட்டுக்கு மிகப்பெரிய அவப்பெயரை ஏற்படுத்திய 1983ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழர்கள் மீதான இனப்படுகொலை நடந்து 39 வருடங்கள் கடந்தபோதும், கௌதம புத்தரின் போதனையை ஏற்றுக்கொண்ட சிங்கள பேரினவாதத்தின் மிகச் சிறிய காடையர் குழுவின் காட்டுமிராண்டித்தனத்தால் கறுப்பு ஜூலை காயங்களால் ஏற்பட்ட தழும்புகள் மாறாத நிலையில் உள்ளதாக ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் ஜீவன் இராஜேந்திரன் தெரிவித்தார்.

ஹட்டன் நண்பர்கள் வட்டத்தினரால் கடந்த 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஹட்டன் கிறிஸ்தவ தொழிலாளர் பொழில் மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த கறுப்பு ஜூலை நினைவு தினத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கறுப்பு ஜூலையின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுவதோடு, அந்தப் படுகொலையிலிருந்து தமிழ் மக்களை பாதுகாத்து, பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிவைத்த சிங்கள உறவுகளுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

இந்தக் கலவரத்தின்போது நாட்டின் வளர்ச்சிக்காக தங்களை வருத்தி உழைத்துக்கொடுத்த அப்பாவி தோட்டத்தொழிலாளர்களும், நிராயுதபாணிகளான தமிழர்களும் காடையர்களால் வேட்டையாடப்பட்டதும், தமிழ் பெண்கள் பாலியல் துஷ்பிரயோகப்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதும், தமிழர்களின் சொத்துகள் சூறையாடப்பட்டதும், தங்களுடைய வாழ்விடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டதும், நாட்டுக்கு மிகப்பெரிய அவப்பெயரை ஏற்படுத்திய கரி நாளாகப் பதிவானது.

அந்தப் போராட்டமே எமது நாட்டை மிக மோசமான நெருக்கடிக்குள் தள்ளிவிட்டது. இன்றைய இந்த பொருளாதார நெருக்கடியில் 1983ஆம் ஆண்டு இனக்கலவரமும் அதைத் தொடர்ந்து எழுச்சிபெற்ற தமிழர் விடுதலைப் போராட்டமும் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதை இந்நாட்டின் அரசியல்வாதிகள் மறந்து செயற்படலாகாது.

அதேநேரம் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக மக்களின் போராட்டம் இளைஞர்களின் தலைமையில் மிகப்பெரிய போராட்டமாக எழுந்து அமைதியடைந்திருக்கின்றது.

இந்த நிகழ்வை மிகஅதிகமான புலனாய்வாளர்கள் அவதானித்துக்கொண்டிருக்கின்றனர். அதேபோல் 1991ஆம் ஆண்டு முதல் என்னை மிக உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

ஒரு காலத்தில் எங்களை போன்ற இளைஞர்கள் தீவிரவாத அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டதை நாம் மறுக்கவில்லை. நாங்கள் விரும்பிப் போகவில்லை.

1983ஆம் ஆண்டு இனப்படுகொலையும், தமிழர்கள் மீதான பாதுகாப்பு அச்சுறுத்தலும், உரிமைமறுப்பு, இனப்பாகுபாடு போன்றவையே எங்களை அந்த அரசியல் செயற்பாடுகளுக்குள் தள்ளிவிட்டது.

இந்த நாட்டிற்காக 200 வருடங்களாக உழைத்துக் கொண்டிருக்கும் மலையக தமிழர்களை பொதுபிரகடனத்தின் மூலம் இந்த நாட்டின் பிரஜையாக ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு வாழ்விடம் அமைத்துக்கொள்வதற்கும், வாழ்வாதாரத்திற்கு ஏற்றவகையில் காணியுரிமை வழங்கி, நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டும்.

இந்த நாட்டில் இன்னுமொரு கறுப்பு ஜூலை வேண்டாம்.

இன்னுமொரு ஆயுதப்போராட்டம் வேண்டாம். ஆகவே, பிரச்சினைகளுக்கு நீதியான நேர்மையான தீர்வை வழங்குவதன் மூலம் இந்நாட்டை வளம்மிக்கதாக மாற்றியமைக்க முடியுமென்றார்.

# நுவரெலியா பிரதான வீதிகளில் சுற்றித்திரியும் மட்டக்குதிரைகளினால் பொதுமக்கள் அவதி



(செ.திவாகரன்)

நுவரெலியா - பதுளை பிரதான வீதிகளில், மட்டக்குதிரைகள், மாடுகள், கட்டாக்காலி நாய்கள் ஆகியவற்றின் நடமாட்டம் அதிகமாகவுள்ளதால் வாகனப் போக்குவரத்தில் சிரமம் ஏற்படுவதாக சாரதிகள் தெரிவிக்கின்றனர். இதனால், அதிக விபத்துகள் ஏற்படுவதாகவும் இவற்றை கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கைகளை மாநகரம் மேற்கொள்ள வேண்டும் எனவும் பொதுமக்களும் வாகன சாரதிகளும் கேட்டுக்கொள்கின்றனர்.

நுவரெலியா பிரதான நகரில் அதிகமான விபத்துகள் தொடர்ந்து நிகழ்கின்றன.

வாகனங்கள் நேருக்கு நேர் மோதல், வேகத்தடையில் தடுமாறி விழுதல் போன்றவற்றால் ஏற்படும் விபத்து எண்ணிக்கையை காட்டிலும், பிரதான பாதைகளில் சுற்றித்திரியும் மட்டக்குதிரைகள், மாடுகள் மற்றும் கட்டாக்காலி நாய்களின் மீது மோதி ஏற்படும் விபத்துகளே அதிகம் நிகழ்கின்றன.

இரவு நேரத்திலும் ஆங்காங்கே அதிகமான மட்டக்குதிரைகள் கூட்டமாக சுற்றித்திரிகின்றன. இதனால் நுவரெலியாவிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளும் வீதிகளில் நடமாடுவதற்கு அச்சப்படும் நிலை காணப்படுகின்றது.

மட்டக்குதிரைகளை வளர்ப்பவர்கள் தினமும் காலையில் மேய்ச்சலுக்கு விட்டுவிட்டு, மாலையில் மீண்டும் வீட்டில் கட்டிவைப்பதில்லை. நுவரெலியா பிரதான பகுதிகளில் பாதை ஓரங்களில் பெரும்பாலான இடங்களில் மின் விளக்குகள் எரிவதுமில்லை. இருள் சூழ்ந்த பகுதியில் நிற்கும் மட்டக்குதிரைகள் தெரியாமல், வாகன சாரதிகள் அதன் மீது மோதி விபத்தில் சிக்கிக்கொள்கின்றனர். விபத்தில் இறப்பு வீதம் குறைவு என்றாலும், மோட்டார் சைக்கிள் வாகனத்தில் செல்வோர் மோதி, கை கால் முறிவு, தலையில் பலத்த காயம் போன்றவற்றால் வைத்தியசாலைக்கு செல்லும் நிலையும் ஏற்படுகின்றது.

விபத்தில் மனிதர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை போலவே லொறி போன்ற கனரக வாகனங்களில் மோதி கால்நடைகள் இறக்கும் நிலையும் ஏற்படுகின்றது. இவ்வாறான இழப்பு குறித்து கால்நடை வளர்ப்போர் கண்டுகொள்வதும் இல்லை.

எனவே, இந்தப் பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து கால்நடை வளர்ப்போருக்கு உரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதையும் மீறி நடக்கும்பட்சத்தில் கால்நடைகளை பறிமுதல் செய்து, கால்நடை வளர்ப்போருக்கு கடும் அபராதம் விதித்து கால்நடையை ஒப்படைக்கவேண்டும் என பொதுமக்களும் வாகன சாரதிகளும் கேட்டுக் கொள்கின்றனர்.

# இலங்கை கடற்படையினருக்கு நன்றி கூறிய தமிழக மீனவர்கள்



(யாழ். நிருபர்)



தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் தமிழக மீனவர்களின் படகு பழுதடைந்தமையால், கடலில் தத்தளித்த தமிழக மீனவர்களை காப்பாற்றி உணவளித்தமைக்காக இலங்கை கடற்படையினருக்கு தமிழக மீனவர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

தமிழகம் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த ராஜா என்பவருக்கு சொந்தமான படகில் 06 மீனவர்கள் தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையில் மீன் பிடித்துக்கொண்டிருந்தவேளை, படகின் இயந்திரம் திடீரென பழுதடைந்தமையால், மீனவர்கள் படகில் தத்தளித்துள்ளனர்.

அப்பகுதியில் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் அவதானித்து, தமிழக மீனவர்களை தமது கடற்படை படகுக்கு ஏற்றி, மீனவர்களின் படகின் இயந்திரத்தை கடற்படையினர் திருத்த முற்பட்டவேளை, அவர்களால் அது முடியவில்லை.

அதனால் மன்னார் கடற்படை முகாமிலிருந்து படகு இயந்திர திருத்துனர்களை அழைத்து முயற்சித்தபோதிலும் அது பயனளிக்கவில்லை. அதனையடுத்து மீனவர்களையும் அவர்களின் படகையும் மன்னார் பகுதிக்கு கொண்டுவந்து, அங்கு மீனவர்களுக்கு உணவளித்த பின்னர் இராமேஸ்வரத்திலுள்ள படகு உரிமையாளருக்கு கடற்படையினர் தகவல் வழங்கினர்.

தகவலின் பிரகாரம் பிறிதொரு விசைப்படகில் படகு உரிமையாளர் உள்ளிட்டவர்கள் சர்வதேச கடற்பரப்புக்கு வருகை தந்ததையடுத்து, அவர்களிடம் மீனவர்களையும் பழுதடைந்த அவர்களின் படகையும் கடற்படையினர் ஒப்படைத்தனர்.

படகின் உரிமையாளர் கடற்படையினருக்கு நன்றி கூறி படகையும் மீனவர்களையும் மீட்டு இராமேஸ்வரம் திரும்பினார்.

இலங்கை கடற்படையினர் தம்மை நெருங்கியவேளை, தாம் கைதுசெய்யப்பட போவதாகவே அச்சமடைந்தோம். ஆனால், அவர்கள் எம்மை கைதுசெய்யாமல் எமது உயிரைக் காப்பாற்றி எமக்கு உணவளித்து, படகையும் எம்மையும் மீள கையளித்தமைக்கு கடற்படையினருக்கு நன்றி தெரிவிப்பதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

# சர்வகட்சி அரசில் தமிழ்க் கட்சிகள் பங்கெடுப்பது அவசியமாகும்

## தமிழ் அரசியல் கட்சிகளுக்கு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

இலங்கை மக்கள் அனைவரும் பெரும் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ள சவாலான சூழலிருந்து மீள்வதற்கு கட்சிகள் அனைத்தும் தமக்கிடையேயான அரசியல் காழ்ப்புணர்ச்சிகளை கடந்து ஓரணியாகச் செயலாற்ற முன்வர வேண்டும் - என்று கடற்றொழில் அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சக தமிழ் அரசியல் கட்சிகளுக்கு அவர் விடுத்துள்ள அந்தச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாடு எதிர்கொண்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள சர்வகட்சி அரசொன்றை அமைத்து முன்னோக்கிச் செல்வதன் ஊடாகவே சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்கான அழைப்பையும் சர்வகட்சிகளுக்கும் எழுத்து மூலம் கடிதமாக அனுப்பிவைத்துள்ளார்.

ஜனாதிபதியின் அந்த அழைப்பை ஈ.பி.டி.பி. வரவேற்பது மாத்திரமல்லாது, அந்த நோக்கம் செயல்வடிவம் பெறுவதற்கான பங்களிப்பையும் செய்துவருகின்றது.



இந்நிலையில், சர்வகட்சியில் பங்கெடுப்பதும், சர்வகட்சி அரசொன்றின் எதிர்கால வேலைத்திட்டத்தில் மூன்று தசாப்தத்திற்கும் மேலாக கொடிய யுத்த வன்முறைக்கு முகங்கொடுத்து பல வழிகளிலும் இழப்புகளைச் சந்தித்துள்ள தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்கும் வேலைத் திட்டங்களையும் வகுத்துக்கொண்டு ஒரு தேசிய இனமாக நாமும் முன்னோக்கிச் செல்லவேண்டும்.

எனவே, தமிழ் அரசியல் கட்சிகள் இலங்கையின் தற்போதைய அரசியல் செல் நெறியை சரியாக கணித்து நாம் தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

சர்வகட்சி அரசை வரவேற்கும் அதே வேளை, அதற்கு முரண்பாடான நிபந்தனைகளை விடுப்பதும், குழப்பத்தில் அரசியல் இலாபம் தேடும் உள்நோக்கத்தோடும் தீர்மானங்களை எடுப்பார்களேயானால் அது மீண்டும் ஒருமுறை தமிழ் மக்களை அரசியல் ரீதியாக தோற்கடிக்கச் செய்ததாகவே அமையும்.

எனவே ஏனைய தமிழ்க் கட்சிகள் தமது வழமையான எதிர்ப்பு அரசியல் எனும் சமகாலத்திற்கு பொருத்தமற்ற அரசியல் போக்கை கைவிட்டு, ஈ.பி.டி.பியாகிய நாம் தொடர்ந்தும் கூறிவரும் நடைமுறைச் சாத்தியமான அரசியல் வழிமுறைக்கு வருவது காலத்தின் அவசியமாகும் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும் – என்றுள்ளது.

# நல்லூர் கந்தசுவாமி கோவில் கொடியேற்ற நிகழ்வுக்கு கொடிச்சீலை கையளிப்பு









(யாழ். நிருபர்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் கொடியேற்ற நிகழ்வுக்கு கொடிச்சீலை கையளிக்கும் நிகழ்வு நேற்று (01) காலை நடைபெற்றது.

நல்லூர் கந்தசுவாமி வருடாந்த பெருந்திருவிழா இன்று (02) காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் மகோற்சவ திருவிழா நடைபெறவுள்ளது.

கொடியேற்ற நிகழ்வுக்காக கொடிச்சீலை கையளிக்கும் நிகழ்வை முன்னிட்டு சட்டநாதர் கோவிலை அண்மித்துள்ள வேல் மடம் முருகன் கோவிலில் நேற்றுக் காலை 9 மணிக்கு நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து, அங்கிருந்து சிறு தேரில் கொடிச்சீலை நல்லூர் ஆலயத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

**வடக்கு செய்திகள்**
thamilannorth@gmail.com

# வவுனியாவில் எந்தவித குழப்பமுமின்றி 1081 சமையல் எரிவாயு வழங்கிவைப்பு







(வவுனியா நிருபர்)


வவுனியா ஊடக அமையம் மற்றும் உக்குளாங்குளம் சீர்திருத்தம் விளையாட்டுக் கழகம் என்பன இணைந்து 1081 லிட்ரோ சமையல் எரிவாயுக்களை எந்தவித குழப்பமுமின்றி அமைதியான முறையில் மக்களுக்கு பெற்றுக்கொடுத்திருந்தன.


வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் அமைந்துள்ள சீர்திருத்தம் விளையாட்டுக் கழக மைதானத்தில் வைத்து அவை நேற்று வழங்கப்பட்டன.

அதன்படி எந்தவித மேலதிக கட்டணங்களுமின்றி 12.5 கிலோ சமையல் எரிவாயு ஒன்று 5,169 ரூபாவீதம் 1011உம், 5 கிலோ சமையல் எரிவாயு ஒன்று 2,127 ரூபாவீதம் 50உம், 2.3 கிலோ சமையல் எரிவாயு ஒன்று 1,044 ரூபாவீதம் 20உம் வழங்கப்பட்டன.


வவுனியாவின் பல்வேறு கிராமப் பகுதிகளிலுமிருந்து வருகைதந்த மக்கள் அதனை பெற்றுச் சென்றதுடன், மக்கள் நீண்ட நேர காத்திருப்பு, நீண்ட வரிசை, நேரவிரயம், அலைச்சல், மேலதிக கட்டணம் என எதுவுமின்றி அதனை இலகுவாக பெற்றுச்சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்









முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களும் நேற்று முன்தினம் ஒரு மணித்தியால பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதுடன், ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

கடந்த சனிக்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இருந்த எரிபொருட்கள் பொலிஸாரால் மீட்கப்பட்ட சம்பவத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் முகமாக இந்த ஆர்ப்பாட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு, துணுக்காய் மற்றும் ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, மணலாறு பிரதேச செயலகங்களிலும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலகங்களிலும் குறித்த ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றிருந்தது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "ஊடக சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்யாதே, அலுவலகத்தில் உட்புகுந்து பொருத்தமற்ற முறையில் கையாண்ட சகல தரப்பினருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், தனிப்பட்ட பழிவாங்கல்களுக்காக ஊடகத்தை பயன்படுத்தாதே, பொதுமக்களை தவறாக வழிநடத்தாதே" போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு பிரதேச செயலக வாயில்களில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் நிர்வாக செயற்பாடுகள் எதுவும் இடம்பெறவில்லை என்பதுடன், பொதுமக்கள் வெளியிலே காத்திருக்க வேண்டிய சூழ்நிலையும் காணப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ தங்குமிடத்தில் எரிபொருள் பதுக்கிவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து நடத்தப்பட்ட சோதனையில், குளியலறையில் வைக்கப்பட்டிருந்த எரிபொருட்கள் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





(யாழ். நிருபர்)

யாழ் ஆரோக்கிய நகரத் திட்டத்தினால் முன்னெடுக்கப்பட்ட "ஆரோக்கியத்தின் பாதையில்" என்ற விழிப்புணர்வு ஈருருளிப் பேரணி நேற்று (01)காலை 07 மணியளவில் ஆரம்பித்து காலை 08 மணியளவில் நிறைவடைந்தது. பொதுமக்களிடையே சுகநலனில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் இவ்விழிப்புணர்வு ஈருருளிப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

## QR எரிபொருள் முறைமை

# எரிபொருள் விநியோகத்தில் தேசிய ரீதியில் வவுனியா நிரப்பு நிலையம் முதலாமிடம்



(வவுனியா நிருபர்)

தேசிய எரிபொருள் அட்டையை பயன்படுத்தி QR முறையில் எரிபொருள் விநியோக நடவடிக்கையில் தேசிய ரீதியில் வவுனியா வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் முதலாமிடம் பெற்றுள்ளது.

நாடுபூராகவும் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணும் முகமாக தேசிய எரிபொருள் அட்டையை (QR) எரிசக்தி அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் பரீட்சார்த்த நடவடிக்கைகள் 31ஆம் திகதிவரை இடம்பெற்றன.

31ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் தேசிய எரிபொருள் அட்டையை QR முறையை பயன்படுத்தி எரிபொருள் விநியோகத்தில் ஈடுபட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களை எரிசக்தி அமைச்சு வரிசைப்படுத்தியுள்ளது.

அதன்படி, தேசிய எரிபொருள் அட்டையை சிறப்பாக பயன்படுத்திய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வவுனியா வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள ஜி.எச்.ஏ.டீ. சில்வா எரிபொருள் நிரப்பு நிலையம் தேசிய ரீதியில் முதலாமிடம் பெற்றுள்ளது.

இரண்டாம் இடத்தை அநுராதபுரத்திலுள்ள டபிள்யூ.எம்.டீ.கே.உயன்வத்தை எரிபொருள் நிரப்பு நிலையமும், மூன்றாம் இடத்தை யாழ்ப்பாணம் கொக்காவில் பகுதியில் அமைந்துள்ள ஜெயபிரணவன் எரிபொருள் நிரப்பு நிலையமும் பெற்றுள்ளன.


திகதி 31.07.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4833
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,468,700.00
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 0 0 4 2 3 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 28,859,413.60

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3075
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,219,500.00
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 25 26 35 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,330,076.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 863
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,533,000.00
R 06 40 59 67
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 119,703,900.80

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 142
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,693,980.00
இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 14 24 47 62
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,486,915.20

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1181
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,222,600.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 263,370,626.00
V 14 19 29 33 42
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# மட்டக்களப்பில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிப்பு

## இவ்வாண்டில் இதுவரை 901 பேர் பாதிப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் அதிகரித்து வருகின்றது. கடந்த ஜூலை 18ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதிவரையான காலப்பகுதியில் 12 பேர் டெங்குநோய் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர்.

இவ்வாண்டில் மொத்தமாக 901 பேர் டெங்கு நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ.சுகுணன் அறிக்கை ஒன்றினூடாக தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் எமது மாவட்டத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றமை தரவுகள் மூலம் கணிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நோயின் தாக்கத்தை உணர்ந்து பொதுமக்கள் மிகவும் விழிப்புணர்வுடன் செயற்படுவதுடன், வீடுகளில் நீர் தேங்கியிருக்கும் இடங்களை அகற்றி டெங்கு நுளம்புகள் பெருகுவதை தடுத்து எமது சுற்றுப்புறச் சூழலை சுகாதாரமுறையில் பேணுவது எமது கடமையாகும்.

பெறுமதியான மனித உயிரை பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றாய் செயற்பட்டு எமது நாட்டிலிருந்து டெங்குவை ஒழிப்பதற்கு ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூணவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

# கல்முனை வடக்கில் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம்; சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு அறிவித்தல்

(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட கிராமங்களில் டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம் இருப்பதால் பொதுமக்கள் தங்கள் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்குமாறு கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனை வேண்டுகோள் விடுத்துள்ளது.

கல்முனை பிரதேசத்தில் தற்போது இடையிடையே மழையுடன் கூடிய காலநிலை நிலவிவருகின்றது. இதன் காரணமாக பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இங்குள்ள கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, சேனைக்குடியிருப்பு, துறைவந்தியமேடு, நற்பிட்டிமுனை, மணல்சேனை ஆகிய கிராமங்களில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் இனங்காணப்பட்டு, அதனை ஒழிக்கும் செயற்பாட்டில் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் டெங்கு ஒழிப்பு கட்டுப்பாட்டு செயலணியினர் ஈடுபட்டுள்ளனர்.

வீடு வீடாகச் சென்று டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் இனங்காணப்பட்டு வருவதுடன், சுற்றப்புறத்தை தூய்மையாக வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் பாடசாலைகள், அரச அலுவலகங்கள, தனியார் கல்வி நிலையங்கள், பொது இடங்கள் ஆகியவற்றையும் தூய்மையாக வைத்திருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் தொற்றுநோய்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் செயற்படவேண்டும் என கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் என்.ரமேஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மட்டக்களப்பிலும் QR முறைப்படி எரிபொருள் விநியோகம்





(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பிலும் நேற்று முதல் QR முறைப்படி எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

நாடு முழுவதும் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்தும் நேற்று (01) முதல் QR ஒதுக்கீட்டு முறைமைக்கு அமைவாக மட்டுமே எரிபொருள் விநியோகிக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் நிலைவரப்படி, தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்திற்காக சுமார் 5 மில்லியன் வாகனங்கள் பதிவுசெய்யப் பட்டுள்ளதாகவும், நாட்டிலுள்ள மொத்த எரிபொருள் நிலையங்களில் 95 வீதமானவை QR முறைமையை பின்பற்றியுள்ளதாகவும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

QR முறைமையைப் பின்பற்றும் எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகம் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் எரிபொருள் நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும் எரிபொருள் இருப்புகளிலிருந்து QR குறியீட்டைப் பயன்படுத்தி எரிபொருள் விநியோகிக்கப்படுவது குறித்து கண்காணிக்கப்பட்டு எதிர்காலத்தில் விநியோகம் இடம்பெறும் எனவும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் QR குறியீட்டு முறைமையை பின்பற்றி எரிபொருள் வழங்கும் திட்டம் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டதனை காணமுடிந்தது.

இதற்கமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிபொருள் வழங்கப்பட்ட அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் குறித்த நடைமுறை பின்பற்றப்பட்டதனை அவதானிக்க முடிந்தது.

இதன்போது சுகாதார முறைப்படி மாஸ்க் அணிந்து வருகை தந்தவர்களுக்கே எரிபொருள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வீடுகளில் டெங்கு நுளம்பு களப் பரிசோதனை







(மாளிகைக்காடு நிருபர்)

காலநிலை மாற்றம் காரணமாக மழைக்காலம் ஆரம்பமாக உள்ளதனால் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்புரையின்கீழ் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லீமா வசீர் தலைமையில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், நுளம்பு கள தடுப்புப் பிரிவினர்கள் இணைந்து மேற்கொள்ளும், டெங்கு நுளம்புகள் பெருகுவதை தடுக்கும் பொருட்டு தொடர்ச்சியாக கொள்கலன் சேகரிப்பு நிகழ்வுகள் மற்றும் கள பரிசோதனை நடவடிக்கைகள் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி நிர்வாக பிரதேசங்களில் நடைபெற்று வருகின்றன.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சுகாதார வைத்திய அதிகாரி தஸ்லீமா வசீர், எமது அலுவலக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் நுளம்பு கள தடுப்புப் பிரிவினர்கள் இணைந்து வீடுகளில் டெங்கு பரிசோதனை மேற்கொண்டபோது அதிகமான இடங்களில் நுளம்பு குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எனவே, பொதுமக்கள் இரண்டு நாட்களுக்கு மேல் குடம், வாளி மற்றும் நீல நிற பரல்களில் நீரை சேமித்து வைக்கவேண்டாம், ஒவ்வொரு முறையும் நீர் சேமிக்கும் கொள்கலன்களை பூரணமாக கழுவி சுத்தம்செய்த பின்னரே மீண்டும் நீரை சேகரித்தல் வேண்டும், ஒவ்வொரு நாளும் உங்கள் கிணறு, நீர் சேமிக்கும் கொள்கலன்கள், மலசலகூட வாளி, சுற்றுப்புறங்களில் நீர் தேங்கும் இடங்களை அவதானியுங்கள்.

மேலும் அநேக வீடுகளின் வீட்டின் உட்பகுதியில் குளிர்சாதனப் பெட்டியின் பிற்பக்க நீர் தேங்கும் பகுதிகள், சமையலறையின் சிங் (sink) இன் கீழ்ப்பக்க பகுதிகள், கூரையிலிருந்து கசிந்துவரும் மழைநீரை சேகரிக்கவைக்கும் பாத்திரங்கள், குளியலறையில் நீர் சேகரித்துவைக்க பாவிக்கப்படும் வாளிகள், நீர் தேங்கி நிற்கும் பூச்சாடிகள் போன்றவற்றில் அதிகமான நுளம்பு குடம்பிகள் அவதானிக்கப்பட்டுள்ளன,

எனவே, குறிப்பிட்ட இடங்களில் அதிக கவனம் செலுத்தி நுளம்புகள் பெருக இடமளிக்காமல் சுத்தம் செய்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றேன். சுத்தம் செய்ய தவறும் பட்சத்தில் உரிமையாளருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டக்களப்பு புனித இஞ்ஞாசியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கொடியிறக்கத்துடன் நிறைவு





(மட்டக்களப்பு நிருபர்)

புனித இஞ்ஞாசியார் மனமாற்றம் பெற்ற 500ஆவது ஆண்டு நிறைவு விழாவினைச் சிறப்பிக்குமுகமாக மட்டக்களப்பு மறை மாவட்ட பாதுகாவலராம் புனித இஞ்ஞாசியார் ஆலயத்தின் 106ஆவது வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் (31) கொடியிறக்கத்துடன் இனிதே நிறைவடைந்துள்ளது.

கடந்த 22ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையும், பிரார்த்தனையும் இடம்பெற்று, பங்குத்தந்தை அருட்பணி லோறன்ஸ் லோகநாதன் அடிகளார் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நவநாட் காலங்களில் தினமும் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையும், பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டு, கடந்த 30.07.2022 திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு புனிதரின் திருவுருவப் பவனி வழமையான வீதிகளினூடாக வலம் வந்து மீண்டுமாக ஆலயத்தை வந்தடைந்ததும் நற்கருணை ஆராதனையும் ஆசீரும் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து 31.07.2022ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு பெருவிழா கூட்டுத் திருப்பலியானது மட்டக்களப்பு மாவட்ட இயேசு சபை மேலாளர் அருட்பணி ரீ.சகாயநாதன் அடிகளார் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டதுடன் கொடி இறக்கப்பட்டதனைத் தொடர்ந்து ஆலயத் திருவிழா இனிதே நிறைவடைந்துள்ளது.

நவநாட்காலங்களில் அருட்தந்தையர்களான ரீ.மரியதாஸ் (SJ), ஏ.ஏ.நவரட்ணம் (நவாஜி), நிர்மல் சூசைராஜ் (J.D. H), ரீ.ஏ.யூலியன், ஜேம்ஸ் சுரேஸ் (SJ), ஜே.அனிஸ்ரன் மொறாயஸ் (SJ), எஸ்.ஜோசப் அற்புதராஜ் (SJ), பயஸ் பிரசன்னா மற்றும் அருட்தந்தை மெருசன் ஹென்றிக் ஆகியோர் அருளுரையாளர்களாக பங்கேற்று திருப்பலியினையும் ஒப்புக்கொடுத்திருந்ததுடன், இன்றைய திருவிழா கூட்டுத்திருப்பலியில் ஆலய உதவி பங்குத்தந்தை ஜேம்ஸ் அடிகளார் உள்ளிட்ட ஆலயத்தின் முன்னால் பங்குத்தந்தையர்களும், இயேசு சபைத் துறவிகள் மற்றும் அருட்சகோதரிகள் உள்ளடங்கலாக பொது நிலையினர், பங்கு மக்கள், அயல் பங்கு மக்கள் என அதிகளவிலானோர் கலந்துகொண்டு இஞ்ஞாசியாரின் அருளாசியினை பெற்றுக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாழைச்சேனை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய தீர்த்தோற்சவம்





(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரசித்திபெற்ற ஆலயங்களில் ஒன்றான புதுக்குடியிருப்பு வாழைச்சேனை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் தீர்த்தோற்சவம் ஆடிப்பூர தினமான நேற்று (01) பாசிக்குடா கடலில் பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் இனிதே நிறைவுபெற்றது.

கடந்த 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் பிரம்மோற்சவப் பெருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்களும் கிரியை நிகழ்வுகளும் உற்சவ நிகழ்வுகளும் நடைபெற்றன. நேற்று முன்தினம் சப்பறத் திருவிழாவும் நடைபெற்றது.

நேற்று (01) அம்பாளுக்கு விசேட பூசை இடம்பெற்று, அம்பாள் உள் வீதி வலம் வந்து பக்தர்கள் புடைசூழ ஆலய முன்றலில் உள்ள தீ மிதிப்பு இடத்திற்கு சென்று தீ மிதிக்கும் நேற்றிக்கடன் செலுத்தும் பக்தர்களுக்கு அருள் ஆசி வழங்கிய பின்னர், வாழைச்சேனை கல்குடா வீதி வழியாக ஆலயங்களை தரிசித்து அடியவர் ஊர்வலமாக சென்று பாசிக்குடா கடலில் வழக்கம்போல் தீர்த்தம் ஆடப்பட்டது.

திருவிழாக்கள் யாவும் ஆலயத் தலைவர் பரராஜசேகரம் தலைமையில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வீ.தயாபரக் குருக்களின் பங்குபற்றுதலுடன், பிரம்மோற்சவ பிரதம குரு கிரியாஜோதி தேசமான்ய சிவஸ்ரீ வெங்கட சுந்தரராம குருக்கள் நடத்திவைத்தார்.

# கருணை உள்ளம் அறக்கட்டளையால் வாழ்வாதார உதவிகள் வழங்கிவைப்பு





(பாண்டிருப்பு நிருபர்)

கருணை உள்ளம் அறக்கட்டளை அமைப்பினால் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள எருவில் கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவிக்கான மாதாந்த கொடுப்பனவு, எருவில் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் ஆகியன வழங்கப்பட்டன.

கருணை உள்ளம் அறக்கட்டளையானது வடக்கு, கிழக்கிலுள்ள பொருளாதார ரீதியில் நலிவற்ற குடும்பங்கள் மற்றும் மாணவர்களின் நல்வாழ்விற்கான உதவிகளை வழங்கி வருகின்றது. இதற்கமைய நேற்று (01) எருவில் கிராமத்தில் பல்வேறு உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன. இதற்கான அனுசரணையினை திருகோணமலையைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் சமூக ஆர்வலர் நிசாந்தன் நிரோஜினி தம்பதிகள் வழங்கியிருந்தனர்.

கருணை உள்ளம் அறக்கட்டளை அமைப்பின் தலைவர் ஏ.ரஜீதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபை உறுப்பினர் இ.வினோதினி, அனுசரணையாளர் சமூக ஆர்வலர் நிசாந்தன் நிரோஜினி உட்பட எருவில் கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகிகள், விளையாட்டுக்கழகங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். இங்கு மக்களுக்கான சேவைகளை புரிந்துவரும் லண்டன் நிசாந்தன் மக்களால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# கந்தளாயில் 783 லீற்றர் டீசலுடன் இருவர் கைது

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 783 லீற்றர் டீசலுடன் இருவரை நேற்று முன்தினம் இரவு (31) கைதுசெய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தளாய், வென்ராசன்புர பகுதியைச் சேர்ந்த இருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேகநபர்கள் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக இரண்டு பரல்களில் மறைத்து வைத்திருந்த நிலையிலேயே 783 லீற்றர் டீசலை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய 783 டீசலுடன் இரண்டு சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்களை தடுத்துவைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# வாழ்வாதாரமற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு





(மாளிகைக்காடு நிருபர்)

அம்பாறை மாவட்ட அரசசார்பற்ற நிறுவனமான நிந்தவூர் பெஸ்ட் ஓவ் யங் சமூக சேவைகள் அமைப்பு 'மாணவர் மகிமை' வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக பாதிக்கப்படும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு கரம் கொடுக்கும் நோக்குடன் நிந்தவூர் கமு/கமு/ அறபா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இது தொடர்பான நிகழ்வில் இங்கு ஆரம்பப் பிரிவில் கல்வி பயிலும் தேவையுடைய திறமை காட்டிய மாணவர்களுக்கு இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பெஸ்ட் ஓவ் யங் அமைப்பின் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சீ.ஓ.லெஸ்தகீர் சர்வதேச கல்லூரியின் முகாமைத்துவ பணிப்பாளரும், இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளருமான ஓ.எல்.சப்ரி இஸ்மத், வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.இந்திகாப் அலி, பெஸ்ட் ஓப் யங் அமைப்பின் செயலாளர் ஏ புஹாது, பொருளாளர் எஸ்.ஏ.பாஸித் பாடசாலை அதிபர் எம்.எச்.அப்துல் பதியுதீன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# இரவுநேரக் கடமையில் வைத்தியர்கள் இன்மையால் நோயாளர்கள் அவதி

## கல்முனைக்கு புதிய பணிப்பாளரை நியமிக்கக் கோரிக்கை

(பைஷல் இஸ்மாயில்)

கல்முனை பிராந்திய அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையில் இரவுநேரக் கடமை வைத்தியர்கள் வைத்தியசாலையில் இல்லாமல் வீடுகளில் உறங்குவதாக நோயாளிகளும், பொதுமக்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த சனிக்கிழமை (30) 11.50 மணியளவில் கண்ணில் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு சிகிச்சை பெற்றுக்கொள்ளச் சென்றுள்ளனர். அங்கு இரவுநேரக் கடமை வைத்தியர் வைத்தியசாலையில் இல்லாமல் தனது வீட்டில் உறங்குவதாக கடமையிலிருந்த தாதிய உத்தியோகத்தரும், சுகாதார உதவியாளரும் சிகிச்சை பெற்றுக்கொள்ள வந்தவர்களிடம் தெரிவித்துள்ளனர். சிகிச்சை பெறவந்த நோயாளியை வேறு வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இரவுநேரத்தில் ஏதாவது அவசர தேவை ஏற்பட்டால் எனது அலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்துங்கள் என்று கூறிவிட்டு குறித்த வைத்தியர் வீடு சென்றதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

நோயாளிகளுக்கு அவசரமாக சிகிச்சை வழங்கவேண்டும் என்பதற்காகவே அவசர சிகிச்சைப் பிரிவு உருவாக்கப்பட்டு, அதற்கென வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களும் சுழற்சி முறையில் 24 மணிநேரக் கடமையில் அமர்த்தப்பட்டு அவை இயங்கிவருகின்றன. வைத்தியர்களும், ஊழியர்களும் இரவுநேரக் கடமையின்போது வீட்டில் உறங்குவதாக இருந்தால் அவர்களுக்கு எதற்காக இந்தக் கடமை வழங்கவேண்டும்? அவ்வாறு வீட்டில் உறங்குகின்றவர்களால் நோயாளிகளுக்கு எவ்வாறு அவசர சிகிச்சைகளை வழங்க முடியும்? இது சாத்தியமாகுமா? அவர்கள் வீட்டிலிருந்து வருவதற்குள் நோயாளியின் நிலை என்னவாகும்? என்ற கேள்விகளை பொதுமக்கள் கேட்கின்றனர்.

கடந்த காலங்களில் இருந்த பணிப்பாளர்களின் காலங்களில் இவ்வாறான சம்பங்கள் மிகக் குறைவாகவே காணப்பட்டு வந்ததாகவும், குறிப்பாக, தற்போது மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய பணிப்பாளராக இருக்கின்ற வைத்தியர் குணசிங்கம் சுகுணனின் காலப்பகுதில் கல்முனைப் பிராந்தியத்திலுள்ள ஆயுள்வேத வைத்தியசாலைகள் உள்ளிட்ட அனைத்து வைத்தியசாலைகள், நிறுவனங்கள் போன்றவற்றின் செயற்பாடுகள் மிகச் சிறப்பாகவும், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் என்ற பாகுபாடின்றியும், குறை நிறை காணப்படுமிடத்து அவை உடனுக்குடன் நிவர்த்திசெய்து கொடுக்கும் பணிப்பாளராகவே காணப்பட்டு வந்தார் என்று நோயாளிகளும், பொதுமக்களும், வைத்தியர்களும், உத்தியோகத்தர்களும், சுகாதார ஊழியர்களும் இன்றுவரை அவரின் செயற்பாடுகளை பாராட்டி புகழ்பாடி வருகின்றனர்.

ஆனால், தற்போதுள்ள கல்முனை பிராந்திய பணிப்பாளர் இதைக் கண்டும் காணாதவர்போன்று செயற்பட்டு வருவதாகவும், வைத்தியர்கள், உத்தியோகத்தர் மற்றும் ஊழியர் என்ற பாகுபாட்டுடன் நடந்துவருவதாக சுகாதார ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

அதுமாத்திரமன்றி வைத்தியர்கள் தவறு செய்தால் அவர்களை கண்டுகொள்ளாமலும், ஊழியர்கள் தவறு செய்தால் அதற்கு உடனடி நடவடிக்கையை மனசாட்சிக்கு விரோதமாக எடுத்துவருவதாகவும் சுகாதார ஊழியர்கள் விசனத்துடன் கவலையைத் தெரிவிக்கின்றனர்.

கல்முனை பிராந்தியத்தில் தொடராக இடம்பெற்றுவரும் இவ்வாறான அவல நிலைக்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படியில்லையென்றால் எங்களது பிராந்தியத்திற்கு சிறந்த பணிப்பாளரை நியமிக்கக் கோரிய ஆர்ப்பாட்டத்தை மிக விரைவில் மேற்கொள்வோம் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம் என்று பொதுமக்கள் விசனத்துடன் தெரிவிக்கின்றனர்.

# வாழைச்சேனையில் 3 வீடுகள் உடைத்து தங்க ஆபரணங்கள், பணம் கொள்ளை

**ஒருவர் கைது**

(கனகராசா சரவணன்)

மட்டு. வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள 3 வீடுகளை கடந்த 26ஆம் திகதி அதிகாலையில் உடைத்து தங்க நகை மற்றும் பணத்தை கொள்ளையடித்த வாழைச்சேனை நாவலடி பகுதியைச் சேர்ந்த கொள்ளையன் ஒருவரை கடந்த சனிக்கிழமை (30) கைதுசெய்ததுடன், கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை மீட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள சந்தை வீதியிலுள்ள வீடு ஒன்றிலும், பி.எச். குறுக்கு வீதியிலுள்ள வீடொன்று உட்பட 3 வீடுகளிலும் கடந்த 26ஆம் திகதி அதிகாலையில் சுமார் 2 மணித்தியாலத்துக்குள் ஜன்னல்களை உடைத்து உள்நுழைந்து அங்கிருந்த 4 பவுண் தங்க நகைகள், 2 இலட்சம் ரூபா பணம் ஆகியன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து இது தொடர்பாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டுவந்த விசாரணையில் வாழைச்சேனை நாவலடி பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய ஒருவரை கைதுசெய்து விசாரணையில் கொள்ளை யடிக்கப்பட்ட தங்க ஆபரணங்களை தனியார் கம்பனியில் அடகுவைத்த நிலையில் மீட்டுள்ள துடன், கொள்ளையடிக்கப்பட்ட பணத்தையும் மீட்டனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரை நேற்று முன்தினம் (31) வாழைச்சேனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதையடுத்து அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# தம்பலகாமம் பகுதியில் 3 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கந்தளாய் நிருபர்)


திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மூன்று கிராம் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த ஒருவரை ஓகஸ்ட் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் கடந்த சனிக்கிழமை (30) உத்தரவிட்டார்.

முள்ளிப்பொத்தானை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தேக நபர் சூட்சுமமான முறையில் ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்துவருவதாக தம்பலகாமம் போதைப்பொருள் குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, குறித்த நபரை மூன்று கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதுசெய்ததாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை பொலிஸார் கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# மட்டு. மாமாங்கப் பிள்ளையார் ஆலய வண்ணக்கரின் மோட்டார்சைக்கிளை திருடிச்சென்ற இளைஞன் கைது

(கனகராசா சரவணன்)



மட்டக்களப்பு மாமாங்க பிரதேசத்திலுள்ள மாமாங்கேஸ்வரர் ஆலய உதவி வண்ணக்கரின் வீட்டின் முன்பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிளை திருடிச்சென்ற 21 வயதுடைய இளைஞன் ஒருவரை கடந்த சனிக்கிழமை (30) இரவு மட்டக்களப்பு வெபர் மைதானத்துக்கு அருகில் மோட்டார்சைக்கிளுடன் கைதுசெய்துள்ளதாக மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாமாங்கேஸ்வரர் ஆலயத்துக்கு அருகிலுள்ள கோவில் உதவி வண்ணக்கரின் வீட்டின் முன்பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மோட்டார்சைக்கிளில் அதன் சாவி, தலைக்கவசம் என்பவற்றுடன் நிறுத்திவைத்துவிட்டு வீட்டுக்குள் சென்றுள்ளார்.

இந்நிலையில் குறித்த மோட்டார்சைக்கிள் திருட்டுப் போனமை தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் தொடர் விசாரணையில் ஈடுபட்டுவந்த நிலையில், கடந்த சனிக்கிழமை இரவு வெபர் மைதானத்துக்கு அருகில் இளைஞன் ஒருவர் மோட்டார்சைக்கிள் ஒன்றை உருட்டிச்செல்வதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த பகுதியைச் சுற்றிவளைத்து சோதனையிட்டபோது மோட்டார்சைக்கிளை கொள்ளையிட்ட இளைஞனை கைதுசெய்ததுடன், கொள்ளையிட்ட மோட்டார்சைக்கிளையும் மீட்டனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர் வவுணதீவு பாவற்கொடிச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயது இளைஞன் எனவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# காதலியின் குறுந்தகவலையடுத்து இளைஞன் தூக்கிட்டுத் தற்கொலை

## களுவாஞ்சிக்குடியில் சம்பவம்

(கல்லடி நிருபர்)

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குறுமண்வெளி பிரதேசத்தில் இளைஞன் ஒருவர் தனக்குத்தானே தூக்கிட்ட நிலையில் நேற்று முன்தினம் (31) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரசடி வீதி குறுமண்வெளி-12 பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயது சசிக்குமார் கஜாணனன் என்பவரே தனக்குத்தானே தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவ தினத்தன்று வழமைபோல் காலை, மதிய உணவருந்திவிட்டு வெளியில் சென்றபோது, குறித்த நபரின் தாயார் அவரின் உறவினர் வீட்டுக்கு சென்று வீடு திரும்பியபோது, வீட்டின் அறையின் கதவு பூட்டப்பட்டிருந்ததை அவதானித்த தாய், அயலவர்களின் உதவியுடன் வீட்டின் கதவினை உடைத்து உட்சென்றபோது, குறித்த இளைஞன் தூக்கிட்ட நிலையில் காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவரை தூக்கிலிருந்து மீட்டெடுத்து, வைத்தியசாலைக்கு கொண்டுசென்றபோது அவர் உயிரிழந்துள்ளதை கடமையிலிருந்த வைத்தியர்கள் உறுதிப்படுத்தினர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,


குறித்த இளைஞன் அதே பிரதேசத்திலுள்ள யுவதி ஒருவரை காதலித்து வந்ததாகவும், யுவதியின் தொலைபேசியிலிருந்து அனுப்பப்பட்ட குறுந்தகவலின் பின்னரே அவர் தூக்கிட்டுக் கொண்டுள்ளார் என்பது பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதிவான் ஜே.வி.ஏ.ரஞ்சித்குமாரின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தினை பார்வையிட்ட பின்னர், சடலத்தை பிரேத பிரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருகோணமலையில் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஒருங்கிணைப்பாளர் லவகுகராசாவின் காரியாலயம் உடைப்பு







(கனகராசா சரவணன்)



திருகோணமலை உவர்மலை கணேசபுரத்தில் அமைந்துள்ள வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் க.லவகுகராசாவின் அரசசார்பற்ற நிறுவனமான அகம் நிறுவன காரியாலயத்தின் கூரையை இனந்தெரியாதோர் உடைத்து உள்நுழைந்து, அங்கு அலுமாரிகளை உடைத்து சோதனையிட்டதுடன், சிசிரிவி கெமரா டிவிஆரை கழற்றிச் சென்றுள்ள சம்பவம் நேற்று முன்தினம் (31) இடம்பெற்றுள்ளதாக நிறுவனத்தின் தலைவர் க.லவகுசராசா தெரிவித்தார்.

குறித்த நிறுவனத்தின் காரியாலயத்தை கடந்த சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு பூட்டிவிட்டு சென்று, நேற்று முன்தினம் (31) மாலை 6.00 மணிக்கு மன்னாரில் ஆரம்பமாகவுள்ள 100 நாள் கவனயீர்ப்புப் போராட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பாக காரியாலயத்திற்கு சென்றுள்ள நிலையில், காரியாலய கூரையை உடைத்து, உள்நுழைந்து அங்கு அலுமாரிகள் மற்றும் மேசை லாச்சிகள் உடைக்கப்பட்டுள்ளதுடன், அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கெமரா டிவிஆர் கழற்றிச் செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளதுடன், குறித்த காரியாலயத்தில் மடிகணினி மற்றும் கணினிகள், கெமராக்கள் உட்பட பல பெறுமதியான பொருட்கள் இருந்தும் அவை எதுவும் அங்கிருந்து திருடப்படவில்லை.

எனவே, ஏற்பாடு செய்துள்ள 100 நாள் போராட்டத்தையடுத்து, ஏதோ ஒரு ஆவணத்தை தேடி இனந்தெரியாதோரால் இந்தக் காரியாலயத்தில் இந்த செயற்பாடு இடம்பெற்றுள்ளதாகவும் யார் இங்கு வந்தார்கள், என்ன உரையாடினார்கள் என்பதை பார்ப்பார்கள் என்பதற்காக சிசிரிவி கெமரா டிவிஆரை கழற்றிச்சென்றிருக்கலாம் அல்லது இந்த 100 நாள் போராடத்தை நிறுத்துவதற்கான அச்சுறுத்தலாக இது இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த காரியாலய உடைப்புச் சம்பவம் தொடர்பாக திருகோணமலை தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# விளாவட்டவான் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய உற்சவப் பெருவிழாவின் பாற்குட பவனி






மட்டக்களப்பு, விளாவட்டவான் அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழாவின் பாற்குடப் பவனி கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

மீன்பாடும் தேனாடாம் மட்டுமா நகரின் மேற்கே, விளாவட்டவானில் பன்னெடுங்காலமாக கோவில்கொண்டு வீற்றிருந்து, அருள்பாலிக்கும் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவப் பொங்கல் மகாயாகப் பெருவிழா, பாற்குடப் பவனியுடன் ஆரம்பமாகி, நேற்று முதலாம் திகதி அதிகாலை நாகசதுர்த்தி மகாயாகம், பால்பழம் வைத்தலுடன் இனிதே நிறைவுபெற்றது.

விளாவட்டவான் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து பாற்குடப்பவனியானது ஆரம்பித்து, ஸ்ரீ நாகதம்பிரன் ஆலயத்தை சென்றடைந்ததும் நாகதம்பிரானுக்கும் ஏனைய தெய்வங்களுக்கும் பாலாபிஷேகம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



*தேசிய அரசாங்கம் அமைக்கப் போறாராமே அந்த ரணில் ஐயா..!*


*மஹிந்தட மகன் நாமல் ராஜபக்ஷவுக்கு அமைச்சர் பதவி குடுக்கிறதுக்கான அடித்தளம்தான் இது!*


*கோட்டா போனாலும், மஹிந்த போனாலும் மகன வளக்க வேண்டும் எண்டு எலுவா...*

*ரணிலிட்ட சொன்னத அவர் தேசிய அரசாங்கம் எண்ட பேரில பேய்காட்டப்போறாரு...*

*இருந்து பாருங்கவன் புதினத்த. இதுதான் நடக்கும்! மெய்யா..மெய்யா*

# கிழக்கு மாகாணப் பணிப்பாளராக தெய்வேந்திரன் கடமைகளை பொறுப்பேற்பு





(பைஷல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் புதிய மாகாணப் பணிப்பாளராக ஏ.ஜீ.தெய்வேந்திரன் நேற்றுக் காலை (01) தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றிவந்த என்.மதிவண்ணன் மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளராக கடந்த 2022.03.31ஆம் திகதி கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் நியமிக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு இலங்கை நிர்வாக சேவை தரம் ll யைச் சேர்ந்த ஏ.ஜீ.தெய்வேந்திரன் நியமிக்கப்பட்டார்.

இவர், கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் உதவிச் செயலாளராக கடமையாற்றிவந்த நிலையிலேயே ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் நியமிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, சமூக நலன்புரிச் சேவைகள், கிராமிய மின்சார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், உதவிப் பணிப்பாளர் திருமதி எஸ்.சரண்யா, நிர்வாக உத்தியோகத்தர் எ.சுவேந்தர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# உலக செய்திகள்

# குரங்கு அம்மை தொற்று: கேரளாவில் ஒருவர் உயிரிழப்பு

## ஆந்திரா - கர்நாடகாவிலும் தொற்று பாதிப்பு

உலகம் முழுவதும் 75 நாடுகளில் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு குரங்கு அம்மை நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குரங்கு அம்மையானது ஆர்த்தோபாக்ஸ் வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்தது. ஒருவகையில் இது 1980களில் ஒழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பெரியம்மை நோயை ஏற்படுத்தும் ஆர்த்தோபாக்ஸ் வைரஸ் உடன் இணைந்த பண்புகளைக் கொண்டதாகும்.



இந்நிலையில், கேரளாவில் இதுவரை 3 பேருக்கு குரங்கு அம்மை தொற்று பாதிப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதேவேளை, டில்லியில் ஒருவருக்கு குரங்கு அம்மை நோய் உறுதிசெய்யப்பட்டிருந்தது. கேரளாவில் இதுவரை குரங்கு அம்மை நோய் உறுதிசெய்யப்பட்டவர்கள் அனைவருமே வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியவர்கள்.

ஆனால், டில்லியில் குரங்கு அம்மை நோய் உறுதி செய்யப்பட்டிருப்பவர் எந்த வெளிநாட்டுக்கும் செல்லாதவர். இந்நிலையில், இமாச்சல பிரதேசத்தின் சோலன் மாவட்டத்தில் ஒருவருக்கு சந்தேகத்துக்கு இடமான குரங்கு அம்மை பாதிப்பு அறிகுறி கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அந்த நபரின் மாதிரிகள் புனேவில் உள்ள தேசிய வைரலொஜி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கேரளாவில் குரங்கு அம்மை நோய்க்கு சிகிச்சை பெற்றுவந்த நபர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து வந்த குருவாயூர் பகுதியைச் சேர்ந்த அந்த 22 வயது இளைஞர் கடந்த 27ஆம் திகதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். குரங்கு அம்மை நோய்த் தொற்றுக்கு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக கேரள அரசு தெரிவித்தது. அவரிடமிருந்து எடுத்த மாதிரிகள், புனேவிலுள்ள தேசிய வைரலொஜி நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன

எத்தியோப்பியாவைச் சேர்ந்த 55 வயதான நோயாளி சிறுநீரகம் உள்ளிட்ட பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் ஜூலை முதல் வாரத்தில் கர்நாடக மருத்துவமனைக்கு வந்துள்ளார்.

ஆனால், அண்மையில் குரங்கு அம்மை நோய்க்கான அறிகுறிகள் அவரிடம் தென்பட்டதால், மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவரோடு தொடர்பிலிருந்தவர்களையும் கண்காணிக்கும் பணி தொடங்கியுள்ளது.

அத்தோடு, ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டத்தைச் சேர்ந்த 8 வயது சிறுவனுக்கு குரங்கு அம்மை நோய்த் தொற்று இருப்பதாக தெரியவந்துள்ளது. இதையடுத்து அவர் குண்டூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

குரங்கு அம்மை நோய்க்கு இதுவரை ஆபிரிக்காவுக்கு வெளியே பிற எந்தவொரு நாட்டிலும் உயிரிழப்பு இல்லை என்ற நிலை இருந்தது. இந்நிலையில், தொற்றுக்கு பிரேஸில் நாட்டில் 41 வயதுடைய ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

## 1.59 மில். விநாடிகள்....

# ஜூலை 29இல் 24 மணிநேரத்திற்கு முன்னரே சுழற்சியை நிறைவுசெய்த பூமி



பூமியானது கடந்த 29ஆம் திகதியன்று (ஜூலை 29) 24 மணி நேரத்திற்கு முன்னரே தன்னைத்தானே சுற்றும் ஒருநாள் சுழற்சியை முடித்திருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

நமது பால்வெளி அண்டத்தைப் பொறுத்தவரை பூமி உள்ளிட்ட கோள்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. பூமி ஒரு முறை சூரியனைச் சுற்றி வருவதே ஒரு வருடமாக நாம் கணக்கில் எடுத்துக்கொள்கிறோம். சூரியனை சுற்றி வருவதுபோல் பூமி தன்னைத்தானே சுற்றி வருகிறது. பூமி தன்னைத்தானே ஒரு முறை சுற்ற 24 மணி நேரம் எடுத்துக்கொள்ளும். இதுவே பூமியில் இரவு, பகல் தோன்ற காரணமாக உள்ளது.

இவ்வாறான சூழலில் கடந்த ஜூலை 29ஆம் திகதியன்று பூமியானது வழக்கத்திற்கு மாறாக 1.59 மில்லி விநாடிகள் முன்னதாகவே தன்னைத்தானே சுற்றும் சுழற்சியை நிறைவு செய்திருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக மிகக் குறுகிய பகல் பொழுது அமைந்து சாதனை நிகழ்ந்துள்ளது.

இதற்கு முன்னர் இவ்வாறான நிலை 50 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்துள்ளது. 1960ஆம் ஆண்டு ஜூலை 19ஆம் திகதி 1.47 மில்லி விநாடிகள் முன்னதாகவே தனது சுழற்சியை பூமி நிறைவு செய்ததாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, 50 ஆண்டுகளாகவே பூமி வேகமாக சுழன்று கொண்டிருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

பூமியின் சுழற்சியில் இவ்வாறான மாறுபட்ட வேகத்திற்கான காரணம் இன்னும் அறியப்படவில்லை எனவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

# நாட்டின் பாதுகாப்பில் சமரசம் இல்லை

## இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு திட்டவட்டம்



இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலனில் தாக்கத்தை ஏற்படுத்தும் எந்த விளைவையும் அனுமதிக்க மாட்டோம் என்று வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.


சீனாவுக்கு சொந்தமான உளவுக் கப்பல் அடுத்த மாதம் 11ஆம் திகதியன்று இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்து ஒரு வார காலம் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் என இலங்கை இராணுவம் உறுதிசெய்துள்ளது. இது குறித்து கருத்து தெரிவித்த வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் அரிந்தம் பாக்சி,

''இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலனில் தாக்கத்தை ஏற்படுத்தும் எந்த விளைவையும் உன்னிப்பாக கண்காணிப்போம்'' - என்றார்.

ஹம்பாந்தோட்டை ஆழ்கடல் துறைமுகம் சீனாவிடம் கடன் பெற்று மேம்படுத்தப்பட்டது. அந்த கடனை திருப்பு செலுத்த முடியாததால் அந்த துறைமுகத்தை சீனாவுக்கு இலங்கை குத்தகைக்கு அளித்துள்ளது. அங்குதான் இலங்கை உளவுக் கப்பல் நிலைநிறுத்தப்படுகிறது. சீனாவின் ஜன்க் துறைமுகத்திலிருந்து கடந்த மாதம் 13ஆம் திகதி புறப்பட்ட 'யுவான் வாங்க்-5' கப்பல் தைவானை கடந்து இந்திய பெருங்கடலில் இலங்கை நோக்கி பயணித்து வருகிறது.

## ரூ.1,600 கோடி மோசடி:

# நீதிமன்றத்தில் ஆஜராக பாக். பிரதமருக்கு உத்தரவு



பாகிஸ்தான் பிரதமராகவுள்ள ஷெபாஸ் ஷெரீப் குடும்பத்தினர் 28 பினாமி கணக்குகள் மூலமாக ரூ.1,600 கோடி பண மோசடி செய்ததாக கடந்த 2020ஆம் ஆண்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதில், ஷெபாஸ், அவருடைய மகன்கள் ஹம்சா (வயது 47), சுலைமான் (வயது 40) ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. சுலைமான் வெளிநாட்டிற்கு தப்பிவிட்டார். ஷெபாசும், ஹம்சாவும் முன்ஜாமீன் பெற்றிருந்தனர். இந்த வழக்கில் குற்றச்சாட்டை பதிவு செய்வதற்காக ஷெபாஸ் ஷெரீப்பையும், ஹம்சாவைம் எதிர்வரும் செப்டெம்பர் 7ஆம் திகதி நேரில் ஆஜராகும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# கடலுக்குள் கருணாநிதி பேனா சின்னம் அமைப்பு



கருணாநிதி நினைவிடத்தின் பின்பகுதியில் கடலுக்குள் 42 மீற்றர் உயரத்தில் பேனா வடிவ நினைவுச் சின்னம் அமைக்கப்படவுள்ளது.

மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான கருணாநிதிக்கு மெரினாவில் நினைவிடம் அமைக்கப்படும் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார். இதன்படி 2.21 ஏக்கர் பரப்பளவில் ரூ.39 கோடி மதிப்பீட்டில் நினைவிடம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், சில நாட்களுக்கு முன்பு கருணாநிதி நினைவிடத்தின் பின்பகுதியில் கடலுக்குள் 42 மீற்றர் உயரத்தில் பேனா வடிவ நினைவுச் சின்னம் அமைக்க தமிழ்நாடு கடலோர மண்டல ஆணையம் அனுமதி அளித்துள்ளது. கடலுக்குள் ரூ.81 கோடி செலவில் இந்த நினைவுச் சின்னம் அமைக்கப்படவுள்ளது. இதற்கு சென்றடையும் வகையில் நினைவிடத்திலிருந்து 290 மீற்றர் தூரத்திற்கு கடற்கரை, 360 மீற்றர் தூரத்துக்கு கடலிலும் என 650 மீற்றர் தொலைவிற்கு பாலம் அமைக்கப்படவுள்ளது.

இந்த பேனா நினைவுச் சின்னம் தொடர்பாக கடும் விமர்சனம் எழுந்துவரும் நிலையில், பேனா வடிவ நினைவுச் சின்னத்திற்கு கடற்கரை ஒழுங்குமுறை ஆணைய அனுமதி பெறும் பணிகளை பொதுப்பணித் துறை தொடங்கியுள்ளது.

இதன்படி திட்டத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வை (EIA) மேற்கொள்வதற்கான ஆய்வு எல்லைகளை (TOR) கோரி மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சின் நிபுணர் மதிப்பீட்டுக் குழுவுக்கு தமிழ்நாடு பொதுப்பணித் துறை கடிதம் எழுதியுள்ளது.

# கடும் மழை - பெருவெள்ளத்தில் சிக்கி பாகிஸ்தானில் 320 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானில் தொடர்ந்தும் பெய்துவரும் கடும் மழை மற்றும் அதனால் ஏற்பட்டு பெருவெள்ளத்தில் சிக்கி இதுவரை 320 பேர் உயிரிழந்துள்ளனர். வெள்ளம் சூழ்ந்த பகுதிகளை பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் பார்வையிட்டுள்ளார்.

கடந்த 5 வாரங்களாக பெய்துவரும் தொடர் கனமழையால் மிகவும் பாதிக்கப்பட்ட பலுசிஸ்தான் மாகாணத்தில் சுமார் 13,000 வீடுகள் வெள்ளத்தில் முழுமையாக மூழ்கியுள்ளன.

இதுவரை அந்த மாகாணத்தில் 46 சிறுவர்கள் உட்பட 127 பேரும், கராச்சி, சிந்து மாகாணங்களில் 70 பேரும் உயிரிழந்துள்ளனர். இதனிடையே, பலுசிஸ்தான் மாகாணத்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. 30 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.6 அலகுகளாக பதிவாகியுள்ளது.

# வரி ஏய்ப்பில் சிக்கிய பொப் பாடகி ஷகிரா

## ரூ. 116 கோடி; 8 ஆண்டுகள் சிறை



கொலம்பியாவை சேர்ந்த பிரபல பொப் பாடகி ஷகிரா (வயது 45), கடந்த 2012ஆம் ஆண்டுமுதல் 2014ஆம் ஆண்டுவரை ஸ்பெயினில் இருந்தபோது, 116 கோடி ரூபா வருமானத்துக்கான வரி செலுத்தாமல் ஏமாற்றியதாக தெரிவிக்கப்படுகிறது. தவறை ஒப்புக்கொண்டு வரி செலுத்துமாறு ஸ்பெயின் வழக்கறிஞர்கள் சார்பில் ஷகிராவுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. ஆனால், தான் அந்த காலகட்டத்தில் ஸ்பெயினில் வசிக்கவில்லை என்றும், தனது காதலன் பார்சிலோனா கால்பந்து வீரர் ஜெரார்ட் பிக் (வயது 35) என்பவருடன் பஹாமாஸில் வசித்ததாகவும் தெரிவித்துள்ளார். இதையடுத்து இந்த விவகாரம் நீதிமன்றம் வரை சென்றது. இதுகுறித்து ஸ்பெயின் வழக்கறிஞர் அமைப்பினர் தெரிவிக்கையில், ''பாடகி ஷகிரா 2011இல் ஸ்பெயினில் குடியேறிவிட்டார். பஹாமாஸில் சொந்த வீடு இருக்கிறது. வருமான வரி வழக்கின் மனுவை ஷகிரா நிராகரித்துள்ள நிலையில், அவர் மீதான குற்றம் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால் 8 ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் வரி ஏய்ப்புக்காக 150 கோடி ரூபா அபராதம் விதிக்கப்படலாம்'' என்றனர்.







அமெரிக்கா தேசிய வணிக பல்கலைக்கழகம் கௌரவ டொக்டர் பட்டமளிப்பு விழா சென்னை தி.நகரிலுள்ள தி ரெசிடென்ஸி டவர் நட்சத்திர ஹோட்டலில் நடைபெற்றது. விழாவுக்கு அமெரிக்க தேசிய வணிக பல்கலைக்கழக உலக ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் என்டனி டெக்ஸ்டர் பெர்னாண்டோ தலைமை வகித்தார். விழாவிற்கு வந்த அனைவரையும் உலக தமிழ் இணைய பல்கலைக்கழக துணைவேந்தர் டொக்டர் ராம் பெர்னாண்டோ வரவேற்று பேசினார்.

விழாவில் பாரதீய சாகித்ய ரத்னா விருது என்பது உலகளவில் எழுத்துத் துறையில் சிறந்து விளங்குபவர்களை அங்கீகரிக்கும் மிகவும் நம்பிக்கைக்குரிய விருதாகும். இந்தியாவில் பிஎஸ்ஆர் விருதுகள் வெற்றியை அங்கீகரிப்பது, பங்களிப்புகளை அங்கீகரிப்பது, முயற்சிகளைப் பாராட்டுவது மற்றும் பங்களிப்பாளர்களின் வளர்ச்சியைக் கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உலகளவில் எழுத்துத் துறையில் சிறந்து விளங்குபவர்களை அங்கீகரிக்கும் நம்பிக்கைக்குரிய விருது "பாரதீய சாகித்ய ரத்னா விருது" ஆகும். அந்த வகையில் இந்திய-சிலோன் நட்புறவு அமைப்பின் ஊடக இத்துறையின் பணியை அங்கீகரிக்கும் முகமாக மூத்த பத்திரிக்கையாளர் திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீதுக்கு பாரதீய சாகித்ய ரத்னா விருதுகளை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன், சினிமா இயக்குநர் பாரதிராஜா, இயக்குநர் சீனு ராமசாமி, நடிகர் விமல் ஆகியோர் வழங்கினர்.

# ரஷ்ய - இலங்கை வணிக, சுற்றுலா உறவுகள் மேலும் மேம்படுத்தப்படும்

## தூதுவரிடம் அமைச்சர் அலி சப்ரி நம்பிக்கை தெரிவிப்பு

இலங்கைக்கான ரஷ்யக் கூட்டமைப்பின் தூதுவர் யூரி மேட்டரி புதிதாக நியமிக்கப்பட்ட வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியை அண்மையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து சந்தித்தார்.

அமைச்சர் அலி சப்ரியின் நியமனத்திற்கு வாழ்த்துகளைத் தெரிவித்த தூதுவர் மேட்டரி, புதிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கான ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவின் வாழ்த்துச் செய்தியைக் கையளித்தார்.



இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான பாரம்பரியமான வலுவான பங்காளித்துவத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்கள் குறித்து ரஷ்யத் தூதுவர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு விளக்கமளித்தார். இருதரப்பு மற்றும் பல்தரப்பு அரங்குகளில் இலங்கைக்கு வழங்கப்பட்ட ரஷ்யாவின் ஆதரவுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஆழ்ந்த பாராட்டுகளைத் தெரிவித்தார்.

வணிக உறவுகள், சுற்றுலா மற்றும் இணைப்புகளை மேம்படுத்துவதில் குறிப்பாக கவனம் செலுத்தி, ஒத்துழைப்பை மேலும் ஒருங்கிணைப்பதற்கு அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

கொழும்பில் உள்ள ரஷ்யத் தூதரகத்தின் பிரதித் தலைவர் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## துளிச் செய்திகள்

கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட படோவிட்ட பாலத்துக்கு அருகில் இரு குழுக்களுக்கிடையே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலில் ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயங்களுக்குள்ளாகி களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சூதாட்டத்தின்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கமே மோதலுக்கு காரணம் என பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது 31 வயதுடைய நபர் உயரிழந்துள்ளார்.

****

ஓப்பநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அகரெல்ல பகுதியில் தந்தையின் கத்திக்குத்துக்கு இலக்காகி 31 வயதுடைய மகன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தின்போது கத்தியால் குத்திய நபர் மதுபோதையில் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

****

மாலபே திமுத்து மாவத்தையில் 05 கிராம் 690 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த 38 வயதுடைய நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

****

பேலியகொடையில் 06 கிராம் 360 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த 28 வயதுடைய களனியைச் சேர்ந்த நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

****

தங்காலை, திஸ்ஸமஹாராம வீதியில் காரொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து மரத்தின் மீது மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் காயமடைந்து தங்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்கள் 29 மற்றும் 35 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

****

தனமல்வில, உடவலவ பகுதியில் ரிப்பர் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் உதவியாளர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் காயமடைந்துள்ள சாரதி தனமல்வில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் வெல்லவாயவைச் சேர்ந்த 38 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார்.

# மூத்த சகோதரரின் துப்பாக்கிச் சூட்டில் இளையவருக்கு காயம்

## புத்தளத்தில் சம்பவம்

*(ரஸீன் ரஸ்மின்)*

புத்தளம் - கரம்பை பகுதியில் நேற்று முன்தினம் (31) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நுரைச்சோலை, தளுவ பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு சகோதரர்களுக்கு இடையில் இடம்பெற்ற வாக்குவாதம் முற்றிய நிலையில், ஆத்திரமடைந்த மூத்த சகோதரர் தனது இளைய சகோதரர் மீது மேற்படி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். சந்தேகநபர், கல்கடஸ் எனும் வகையைச் சேர்ந்த உள்ளூர் துப்பாக்கி ஒன்றினை இதற்கு பயன்படுத்தியுள்ளார் என மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் சிகிச்சைக்காக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜப்பானின் தய்சே நிறுவனத்திடமிருந்து இலஞ்சம் பெற்றதாக கூறப்படும் சம்பவம்

## விசாரணைக் குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

ஜப்பானின் தய்சே நிறுவனத்திடம் இருந்து இலஞ்சம் கோரப்பட்டதாக சமூக ஊடகங்கள் உள்ளிட்ட இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்துமாறு முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் வேண்டுகோளுக்கிணங்க, நியமிக்கப்பட்ட மூவரடங்கிய விசாரணைக் குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் (31) ஜனாதிபதி அலுவலகத்தில், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது.

விசாரணைக் குழுவின் தலைவரும், ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதியுமான ஜனாதிபதி சட்டத்தரணி திருமதி குசலா சரோஜனி வீரவர்தனவினால் குழுவின் அறிக்கை ஜனாதிபதியின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டதுடன், குழுவின் ஏனைய உறுப்பினர்களான ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.எம். விக்கிரமசிங்க, எஸ்.எம்.ஜி.கே. பெரேரா ஆகியோரும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டனர்.

இந்த மூவரடங்கிய விசாரணைக் குழு கடந்த ஜூலை 22ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்டது.

# ஹிஜ்ரி 1444 இஸ்லாமிய புது வருடத்தையிட்டு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வாழ்த்து

සමස්ථ ලංකා ජම්ඉයියතුල් උලමා
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா
ALL CEYLON JAMIYYATHUL ULAMA

ஹிஜ்ரி 1444 இந்த இஸ்லாமிய புது வருடத்தில் நம் நாட்டின் அனைத்து விதமான நெருக்கடியான நிலையும் நீங்கி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடனும் சுபீட்சத்துடனும் வாழ இறைவனை பிரார்த்திப்பதாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் உலமாசபையினால் வெளியிடப்பட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யா அல்லாஹ்! இந்த பிறையை அபிவிருத்தி உள்ளதாகவும், ஈமானையும் இஸ்லாத்தையும் சாந்தியையும் கொண்டு வரக் கூடியதாகவும் எங்களுக்கு ஆக்குவாயாக! (பிறையே!) எனது இரட்சகனும் உனது இரட்சகனும் அல்லாஹ்வே தான்!

மலர்ந்திருக்கும் ஹிஜ்ரி 1444 இந்த இஸ்லாமிய புது வருடத்தில் நம் நாட்டின் அனைத்து விதமான நெருக்கடியான நிலையும் நீங்கி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடனும் சுபீட்சத்துடனும் வாழ அல்லாஹ் அருள் புரிவானாக!

இஸ்லாமிய ஹிஜ்ரி நாட்காட்டி என்பது அல்குர்ஆன் மற்றும் ஸுன்னாவின் அடிப்படையில் கால அளவீடாக பயன்படுத்தப்படுவதோடு, இது முஸ்லிம்களின் வாழ்வில் ஒரு முக்கிய பங்கும் வகிக்கிறது. ஸகாத், நோன்பு மற்றும் ஹஜ் போன்ற வருடாந்த வணக்க வழிபாடுகளை செய்து கொள்வதற்கும் இது அவசியப்படுகிறது.

ஹிஜ்ரி நாட்காட்டி என்பது சந்திர நாட்காட்டியாகும். இதில் பன்னிரண்டு சந்திர மாதங்கள் உள்ளதோடு ஒவ்வொரு மாதமும் பிறை பார்த்தல் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. இந்த மாதங்களாவன: முஹர்ரம் (ஆண்டின் முதல் மாதம்), ஸபர், ரபீஉனில் அவ்வல், ரபீஉனில் ஆகிர், ஜுமாதல் ஊலா, ஜுமாதல் ஆகிரா, ரஜப், ஷஃபான், ரமழான், ஷவ்வால், துல் கஃதா, துல்ஹிஜ்ஜஹ்.

அல்லாஹுதஆலா அல்குர்ஆனில் கூறுகின்றான்: வானங்களையும் பூமியையும் படைத்த நாளில், (இருந்து மறுமை நாள் வரை நடந்தேறும் அனைத்து விஷயங்களும் எழுதப்பட்ட) அல்லாஹ்வின் பதிவேட்டில் உள்ளவாறு. நிச்சயமாக மாதங்களின் எண்ணிக்கை அல்லாஹ்விடத்தில் (ஒரு வருடத்திற்குப்) பன்னிரண்டு மாதங்களாகும். (அத்தியாயம்: அத்தவ்பா, வசனம்: 36)

இஸ்லாமிய சந்திர நாட்காட்டியின் ஒரு மாதம் 29 நாட்களாக இருக்கும் அல்லது 30 நாட்களாக இருக்கும். அவ்வகையில், ஓர் ஆண்டு 354 அல்லது 355 நாட்களைக் கொண்டிருக்கும். இஸ்லாமிய சந்திர நாட்காட்டியின் ஒரு வருடத்தின் நாட்களின் எண்ணிக்கை கிரிகோரியன் சூரிய நாட்காட்டியின் நாட்களின் எண்ணிக்கையிலிருந்து பத்து அல்லது பதினொரு நாட்கள் குறைந்து காணப்படும். சுருக்கமாக, இஸ்லாமிய நாட்காட்டி என்பது நான்கு புனித மாதங்களைக் கொண்ட பன்னிரண்டு மாத சந்திர நாட்காட்டி மட்டுமல்ல, அது முஸ்லிம்களின் அடையாளமாகவும் காணப்படுகின்றது.

புதிய ஹிஜ்ரி ஆண்டின் தொடக்கம் எமக்கு ஹிஜ்ரத் எனும் மதீனாவை நோக்கிய ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இடம்பெயர்வை ஞாபகப்படுத்துவதோடு அதன்போது உலகத்திற்கே முன்மாதிரியாக நிறுவப்பட்ட மதீனா சாசனத்தையும் அது நினைவுபடுத்துகின்றது. அதன் ஒவ்வொரு விடயமும் சகவாழ்வு, நல்லெண்ணம், நீதி, நியாயம், தேசப்பற்று போன்றவற்றை எமக்குள் ஏற்படுத்தும் அதேவேளை நம் தாய் நாடான இலங்கைக்கு மற்றுமன்றி முழு உலக இயக்கத்திற்கும் பொருத்தமான, அவசியமான விடயங்களை முன்வைக்கும் யாப்பாகவும் அது திகழ்கிறது.

எல்லாம் வல்ல அல்லாஹுதஆலா மலர்ந்திருக்கும் இந்த ஹிஜ்ரி புத்தாண்டில் நம் நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் சமாதானமும் ஐக்கியமும் மலர துணைபுரிய வேண்டும் என்றும், குறிப்பாக நம் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலை நீங்க வேண்டும் என்றும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பிரார்த்திக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாத சுவாமி ஆலய மகோற்சவம்

## எதிர்வரும் 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகுமென பிரதம குருக்கள் தெரிவிப்பு


*(ரஸீன் ரஸ்மின்)*

பஞ்ச ஈஸ்வரங்களில் முதன்மை பெற்றதும் புத்தளம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்றதும் சக்தி பீடங்களில் ஒன்றுமான சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னைநாத சுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளதாக ஆலய பிரதம குருவும், தர்மகர்த்தாவுமான கலாநிதி சிவஸ்ரீ எஸ்.பந்தமநாபக் குருக்கள் தெரிவித்தார்.

இதுதொடர்பாக தெளிவுபடுத்தும் விஷேட ஊடகவியாலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் மாலை சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னைநாதசுவாமி ஆலய அலுவலகத்தில் இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது,

எதிர்வரும் 14ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 28 நாட்கள் தொடர்ச்சியாக உற்சவங்கள் நடைபெறவுள்ளன.



அத்துடன், செப்டெம்பர் மாதம் 02ஆம் திகதி விநாயகர் உற்சவமும், 03ஆம் சுப்ரமணிய உற்சவமும், 04ஆம் திகதி மஹா விஷ்ணு உற்சவமும், 05ஆம் திகதி தீ மிதிப்பு உற்சவமும், 06ஆம் திகதி பிக்ஷாடனர் உற்சவமும், 07ஆம் திகதி நடேசர் உற்சவமும், 08ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 09ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 10ஆம் திகதி தீர்த்தோற்சவ நிகழ்வுகளும் விசேட உற்சவ நிகழ்வுகளாக நடைபெறவுள்ளன.

கொரோனா அச்சுறுத்தல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலை என்பனவற்றுக்கு நாடு முகம்கொடுத்துள்ள நிலையில், இந்த உற்சவ நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் மீண்டும் தலைதூக்கியுள்ள நிலையில், சுகாதார பிரிவினரின் முழுமையான வழிகாட்டலில் மேற்படி உற்சவ நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

அத்துடன், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அதிகளவில் பக்தர்கள் இங்கு வருகை தரவுள்ளமையால், வருகைதரும் பக்தர்கள் முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியை முறையாக பேணி, அடிக்கடி கிருமி தொற்றுநீக்கி மூலம் கைகளை கழுவுதல் உட்பட சுகாதார வழிகாட்டல்களை முழுமையாக பின்பற்றி இந்த உற்சவ நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்தி முடிக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம். இந்த உற்சவத்தினை நடத்துவதற்கு சிலாபம் பிரதேச செயலகம் மற்றும் நகர சபை உள்ளிட்ட அரச அலுவலகங்களும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளன என்றார்.

# தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் புதிய பகுதிநேர வகுப்புகள் ஆரம்பம்

*(தலவாக்கலை நிருபர்)*

ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் பகுதி நேர கற்கை நெறிகளுக்காக புதிய பயிலுனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொழில் பயிற்சி கற்கை நெறிகளாக அடிப்படை மோட்டார் சைக்கிள் பராமரிப்பு, கையடக்க தொலைபேசி பழுதுபார்த்தல், அடிப்படை ஹோட்டல் தொழிற்பாடு ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களும் மொழி பயிற்சி கற்கை நெறிகளாக ஜப்பான் மொழி, கொரியன் மொழி, அடிப்படை ஆங்கிலம், இரண்டாம் மொழி சிங்களம் ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிகள் வார இறுதி நாட்களில் நடைபெறும். இக்கற்கை நெறிகளை தொடர வயது எல்லை கிடையாது. 100 வீதம் செயன்முறை ரீதியான கல்வியே இங்கு வழங்கப்படும். அத்துடன் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் பயிற்சிநெறி தொடர்பான மேலதிக விளக்கங்களுக்கு வதிவிட முகாமையாளர், தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் 051 2223492, 051 2222762 போன்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் வதிவிட முகாமையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.





நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பஞ்சத்தினை எதிர்கொள்வதற்காக வேண்டி அனைவரும் தயாராக வேண்டும் என்ற அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் கெக்கிராவ கல்வி வலயத்திலுள்ள அல் அமீன் முஸ்லிம் வித்தியாலய பாடசாலை வளாக தோட்டத்தில் அதிபர் எஸ்.எம்.கவுஸ் தலைமையில் நீண்டகால பயன்தரும் பழமரங்கள் மற்றும் உப உணவுப் பயிர்கள் என்பன நடும் பணி ஆரம்பித்துவைக்கப்பட்டது. (படப்பிடிப்பு: அநுராதபுரம் செய்தியாளர்)

# கைபேசிகளை திருடிவந்த மூவர் கைது

## 15 இலட்சம் ரூபா பெறுமதியான 43 தொலைபேசிகள் கைப்பற்றல்

யாழ்ப்பாணத்தில் 03 மாதங்களாக கைபேசிகளை திருடிய கும்பலைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான 43 கைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நாவற்குழி மற்றும் அரியாலையைச் சேர்ந்த 23, 24 மற்றும் 27 வயதுடைய சந்தேக நபர்களே யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் 03 இலட்சம் ரூபா பெறுமதியான ஐபோன் உள்ளிட்ட 45 கைபேசிகள் சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. போதைப்பொருளுக்கு அடிமையாகியதால் பஸ்களில் ஏறி பயணிகளிடம் கைபேசியைத் திருடி தப்பிப்பதாக சந்தேக நபர்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இடம்பெற்ற கைபேசித் திருட்டுகளிலும் இவர்களுக்கு தொடர்புண்டு என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைபேசி திருட்டு போயிருந்தால் உரியவர்கள் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் வந்து அடையாளம் காட்ட முடியும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# Commonwealth Games-2022

## அரையிறுதி வாய்ப்பை இழந்த இலங்கை பேட்மிண்டன் அணி

## நுனியில் தவறிய அடுத்த பதக்க வாய்ப்பு








ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவானது, இங்கிலாந்தின் பேர்மிங்ஹாம் நகரில் கடந்த வியாழக்கிழமை முதல் நடைபெற்றுவரும் நிலையில் நேற்று முன்தினம் இலங்கை பேட்மிண்டன் அணி அரையிறுதிக்கு தகுதிபெறும் வாய்ப்பை இழந்தது.

அணிகளுக்கு இடையிலான பேட்மிண்டன் காலிறுதிப்போட்டியில் மலேசிய அணியை எதிர்கொண்ட இலங்கை அணி 3-0 என தோல்வியை சந்தித்தது. இதன்மூலம் தங்களுடைய அரையிறுதிக்கான வாய்ப்பை இழந்த இலங்கை பேட்மிண்டன் அணி, பதக்கம் வெல்லும் வாய்ப்பை தவறவிட்டது.

இதேவேளை, ஆண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் 67 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்ட சதுரங்க ஜயசூரிய ஐந்தாவது இடத்தை பிடித்துக்கொண்டார். இவர் ஸ்னெட்ச் முறையில் 119 கிலோகிராம் எடையையும், கிளீன் எண்ட் ஜெக் முறையில் 140 கிலோகிராம் எடையுடன் மொத்தமாக 259 கிலோகிராம் எடையை தூக்கியிருந்தார்.இந்தப் போட்டியில் இந்திய வீரர் லால்ரின்னுங்கா ஜெரமி தங்கப்பதக்கத்தை வென்றிருந்ததுடன், சமோவா வீரர் வைப்பவா நெவோ வெள்ளிப்பதக்கத்தையும், நைஜீரியா வீரர் எடிடியோங் ஜோசப் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

## தேசிய சாதனையை புதுப்பித்த பீரிஸ்



பேர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் பொதுநலவாய விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான 50 மீற்றர் பெக் ஸ்ட்ரோக் (பின்நோக்கிய) நீச்சல் போட்டியின் முதல் சுற்றில் இலங்கை வீரர் அகலங்க பீரிஸ் தோல்வியடைந்தபோதும், தன்னுடைய தேசிய சாதனையை புதுப்பித்தார்.

அகலங்க பீரிஸ் இதற்கு முன்னால் தேசிய சாதனையை 26.24 செக்கன்களாக தக்கவைத்திருந்த நிலையில், அதனை முறியடித்து 26.15 செக்கன்களில் போட்டித்தூரத்தை நிறைவுசெய்திருந்தார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## லெஜன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ப்ளூ நேவிஸ் சவால் கிண்ணம் ஆரம்பம்







(கல்முனை நிருபர்)

கல்முனை லெஜன்ஸ் விளையாட்டுக் கழகம் தனது 13ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ப்ளூ நேவிஸ் சவால் கிண்ணம் இருபதுக்கு 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டி கடந்த வாரம் கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில் ஆரம்பமானது.

தொடரின் முதல் போட்டி நிந்தவூர் முத்தகீன் மற்றும் மருதமுனை கோஸ்டல் வோரியஸ் அணிகளுக்கிடையில் இடம்பெற்றது. போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கோஸ்டல் வோரியஸ் அணியினர் தனக்கு வழங்கப்பட்ட 20 ஓவர்களில் 126 ஓட்டங்களை பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய முத்தகீன் அணியினர் 18 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தனர்.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை ஹீனா ஜுவெல்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.ஸி.எம். ஸஹீம், அதிதிகளாக லெஜன்ஸ் விளையாட்டுக் கழகத் தலைவர் எம்.எம். ஜமால்டீன், பிரதி தலைவர் கரீம் மற்றும் தவிசாளர் இனாம் மௌலானா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

பிரதம அதிதியின் கரத்தினால் போட்டியின் ஆட்ட நாயகன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. குறித்த சுற்றுத்தொடர் கிரிக்கெட் போட்டியில் 24 கழகங்கள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்து மண்ணில் முதல்முறையாக தொடரைக் கைப்பற்றிய தென்னாபிரிக்கா




தென்னாபிரிக்கா அணி இங்கிலாந்து மண்ணில் முதல் முறையாக இங்கிலாந்து அணியுடன் இருபதுக்கு 20 சர்வதேச தொடரைக் கைப்பற்றியது. தென்னாபிரிக்க அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரில் இரு அணிகளும் 1-1 என சமனிலை வகித்தன. இருபதுக்கு 20 தொடரின் முதல் இரு போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியை பகிர்ந்தன.

இந்நிலையில், தொடர் யாருக்கு என்பதை தீர்மானிக்கும் 3ஆவது மற்றும் கடைசிப் போட்டி சவுத்தம்டனில் நேற்று முன்தினம் நடந்தது. இங்கிலாந்து அணி முதலில் பந்துவீச்சை தேர்வுசெய்ய முதலில் பேட்டிங் செய்த தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் முடிவில் 05 விக்கெட் இழப்புக்கு 191 ஓட்டங்களை குவித்தது. இலக்கை நோக்கி ஆடிய இங்கிலாந்து அணி 16.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 101 ஓட்டங்களுடன் சுருண்டது.

இதன் மூலம் தென்னாபிரிக்கா 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மிகப்பெரிய வெற்றியை பெற்று தொடரை கைப்பற்றியது. இங்கிலாந்து மண்ணில் தென்னாபிரிக்க அணி 20 ஓவர் தொடரை வெல்வது இதுவே முதல் முறையாகும். இப்போட்டியின் ஆட்ட நாயகன் விருது ஷம்சிக்கும், தொடர் நாயகன் விருது ஹென்ரிக்சுக்கும் அளிக்கப்பட்டது. அடுத்ததாக இரு அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகிறது.

## பார்வையாளர்கள் அரங்கிற்குள் மின்னல் வேகத்தில் பாய்ந்த சைக்கிள்கள்








பொதுநலவாய விளையாட்டு விழாவில் சைக்கிளிங் போட்டியில் பெரும் விபத்து ஏற்பட்டது. இதில், சிலருக்கு காயம் ஏற்பட்டது.

ஆடவர் உள்அரங்கு சைக்கிளிங் போட்டிக்கான தகுதிச்சுற்று போட்டிகள் நேற்று முன்தினம் லண்டன் லி வேலி விலொ பார்க்கில் உள்ள அரங்கில் நடைபெற்றது. இதில் 10இற்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்றனர். 15 கிலோ மீற்றர் சுற்றளவு கொண்ட பந்தைய ஓடுதளத்தை சைக்கிளிங் வீரர்கள் 10 சுற்றுகளாக கடக்க வேண்டும்.

இந்நிலையில்,போட்டியின் 10ஆவது மற்றும் கடைசி சுற்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. வீரர்கள் வேகமாக சைக்கிளை இயக்கி ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு சென்றனர். அப்போது, ஓடுதளத்தில் முன்னே சென்ற சைக்கிள் மீது மற்றொரு சைக்கிள் மோதியது. இதனால், அடுத்தடுத்து வந்த சைக்கிள்கள் ஒன்றன்பின் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டது. வீரர்கள் சைக்கிள்களை வேகமாக ஓட்டியதால் அதை கட்டுப்படுத்த முடியாமல் போனது. சில வீரர்கள் தங்கள் சைக்கிளுடன் மின்னல் வேகத்தில் பார்வையாளர்கள் அமர்ந்திருந்த அரங்கு மீது பாய்ந்தனர்.

இந்த விபத்தில் சைக்கிளிங் விளையாட்டில் ஒலிம்பிக் சம்பியன் பட்டம் வென்ற மேட் வால்ஸ் மற்றும் பிற வீரர்கள் மேட் பொஸ்டாக், கிரீக் கி ஆகியோருக்கு சிறு காயம் ஏற்பட்டது.

பார்வையாளர்கள் அரங்கு மீது வீரர்கள் சைக்கிளுடன் பாய்ந்ததால் அங்கு விளையாட்டை ரசித்துக்கொண்டிருந்த சிலருக்கும் சிறு காயம் ஏற்பட்டது.

விபத்து ஏற்படுத்திய சம்பவம் அரங்கிலிருந்தவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


## கிரிக்கெட் களத்தில் விளையாடத் தயாராகும் கங்குலி

(ரமணி)

உலகத்தரம் வாய்ந்த வீரர்களாக நிரூபித்த வீரர்கள், ஒரு கட்டத்தில் வயதின் காரணமாக ஓய்வு பெறும் நிலையை சந்திக்கின்றனர். ஓய்வு பெற்ற ஜாம்பவான் வீரர்கள் பங்கேற்ற லெஜெண்ட்ஸ் லீக் கிரிக்கெட் கடந்த ஜனவரி மாதம் டுபாயில் நடைபெற்றது. இந்திய மஹாராஜாஸ், ஆசிய லயன்ஸ், உலக ஜெய்ன்ட்ஸ் ஆகிய 03 அணிகள் பங்கேற்ற அந்த தொடரில் சம்பியன் பட்டத்தை உலக ஜெய்ன்ட்ஸ் அணி வென்றது.

இந்நிலையில், இந்த தொடரின் 2ஆவது சீசன் எதிர்வரும் செப்டெம்பர் 20 முதல் ஒக்டோபர் 10 வரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இந்த தொடர் மிகப்பெரிய வெற்றி கண்டதால் இம்முறை இந்தியாவில் நடைபெறும் இந்த தொடரில் மேலும் சில நட்சத்திர முன்னாள் ஜாம்பவான் வீரர்களை சேர்க்க அதை நடத்தும் நிர்வாகம் முயற்சித்து வருகிறது.



இந்திய லெஜெண்ட்ஸ் அணியில் முன்னாள் கெப்டன் சவுரவ் கங்குலி விளையாட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. கடந்த 2008இல் சர்வதேச கிரிக்கெட்டில் ஓய்வு பெற்ற அவர் ஐ.பி.எல். தொடரில் சில வருடங்கள் விளையாடி பின்னர் வர்ணனையாளராக செயல்பட்டு கடந்த 2019 முதல் பி.சி.சி.ஐ. தலைவராக செயல்பட்டு வருகிறார். சமீப காலங்களில் அவரின் ஆட்டத்தை பார்க்க முடியாமல் இருக்கும் அவரின் ரசிகர்களுக்கு வரப்பிரசாதமாக இந்த லெஜெண்ட்ஸ் தொடரில் விளையாட உள்ளதாக அவரே அறிவித்துள்ளார்.

## மகளிர் யூரோ கிண்ணம் - 2022

## பல ஆண்டு கனவை நனவாக்கிய இங்கிலாந்து



மகளிருக்கான யூரோ கிண்ண இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணி ஜேர்மனியைத் தோற்கடித்து, 1966க்குப் பிறகு சொந்த மண்ணில் மிகப்பெரிய சாதனையை பதிவு செய்தது. இங்கிலாந்தின் வெம்ப்லியில் 87,192 ரசிகர்கள் முன்னிலையில் குறித்த சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இதுவரை 08 முறை சம்பியன் பட்டத்தை வென்றுள்ள ஜேர்மனி அணியுடன் இங்கிலாந்து மோதியது. முழு நேரத்தில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல் வீதம் அடித்த நிலையில் வெற்றியாளரை தீர்மானிக்க கூடுதல் நேரம் ஒதுக்கப்பட, இங்கிலாந்தின் சொலோ கெலி வரலாற்று சிறப்புமிக்க தருணத்தை பரிசாக்கினார்.

இறுதியில் 2:1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து அணி வெற்றிவாகை சூடியது. 1966க்கு பின்னர் இங்கிலாந்து மண்ணில் பெண் சிங்கங்கள் யூரோ 2022 கிண்ணத்தை தட்டித்தூக்கி சாதித்துள்ளனர். முதல் ஐந்து போட்டிகளிலும் வெற்றிபெற்ற அதே அணியே இறுதிப் போட்டியிலும் களமிறங்கியது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7